For private circulation only

Book Post

https://christianhistoricalsociety.in/

# கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

மே 2024

திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும்

விலை : ரூ 60 • இதழ் 48

‘கர்த்தருடைய வேலையை
உண்மையாகச் செய்கிறவர்கள்
இம்மையிலும் மறுமையிலும் மறக்கப்படுவதில்லை’



டோனாவூர் நட்சத்திர கூட்டம்

+91 91767 80001
WWW.CHRISTIANHISTORICALSOCIETY.IN

## பதிப்பாசிரியர்

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

**‘திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும்’** என்ற நோக்கத்தில் கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கமானது தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்கள் பலரின் அரும்பெரும் முயற்சியினால் தொடங்கப்பட்டது. வரலாற்றுச் சங்கத்தின் தரிசனத்தில், பல இளைஞர்கள் தன்னார்வத்தோடு தங்களையும் இணைத்து செயல்பட்டு வருகின்றனர். அதுபோல பல தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுடன் கைகோர்த்து இப்பணியைச் செய்து வருகின்றோம். இந்த இதழுடன் நான்கு ஆண்டுகளை நிறைவு செய்கின்றோம். அடுத்த மாதம் ஐந்தாம் ஆண்டினை சிறப்பாக தொடங்க உள்ளோம். கடந்த சில மாதங்களாக மாத இதழை உங்கள் கைகளில் சரிவர கிடைப்பதில் பல பிரச்சனைகளை எதிர்கொண்டு வருகின்றோம். இம்மாத முதல் சரியான நேரத்தில் கிடைக்க ஜெபித்துக்கொள்ளுங்கள்.

உறுப்பினர்கள் மற்றும் வாசகர்களின் ஜெபத்தினாலும் பேராதரவினாலும் வரலாற்றுச் சங்கம் மிகச்சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. நமது பத்து அம்ச திட்டங்களில் மாத ஆய்விதழ், பழைய புத்தகங்களை சேகரித்தல் மற்றும் டிஜிட்டல் செய்யும் பணி, புத்தக மறுப்பதிப்பு பணிகள், மிஷன் சுற்றுப்பயணம், புத்தக வனம் இணைய செயலி, ஆவணப்படம் தயாரித்தல், கிறிஸ்தவ நூலகம், அருங்காட்சியகம் ஆய்வுக் கருத்தரங்கம் போன்ற பணிகளை செய்து வருகின்றதை நீங்கள் அறிந்ததே. இந்த ஆண்டிலும் நம்முடைய நூலக அருங்காட்சியகம் கட்டும் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன. தேவைகள் சந்திக்கப்பட ஜெபித்துக்கொள்ளுங்கள்

திருச்சபை சரித்திர நூல்கள் மற்றும் நம்முடைய பகுதியில் மகத்தான பணி செய்த மிஷனெரிகளின் வரலாற்று நூல்களை தொடர்ந்து வெளியிட்டு வருகின்றோம். ஒவ்வொரு மாதமும் இதழினை வெளிக்கொண்டு வருவதற்கு மிகுந்த பொருட்செலவுகள் உண்டு, சந்தா செலுத்தாதவர்கள் செலுத்த கேட்டுக்கொள்கிறேன். (GPAY-9176780001) தேவைகள் அதிகம் உண்டு, தேவைகள் சந்திக்கப்பட ஜெபித்துக்கொள்ளுங்கள். சந்தா, நன்கொடைகளை அனுப்ப இதழின் பக்கங்களிலிருக்கும் வங்கிக் கணக்குகளை பயன்படுத்திக்கொள்ளுங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக நண்பர்களுக்கு இப்புத்தகத்தை அறிமுகப்படுத்தி அவர்களை சந்தாதாரர்களாக்குங்கள். தேவைகள் சந்திக்கப்படவும் தொடர்ந்து வரலாற்று ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

பாரபரனின் பணியில்

*Manna Selvakumar*


சுஜித் ரெக்ஸ்
வடிவமைப்பு

மன்னா செல்வகுமார்
ஆசிரியர்

இது ஒரு வரலாற்றுச் சங்க உறுப்பினர்களுக்கான பதிப்பு, சந்தா விபரங்கள் இதழின் உள்ளே,


கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

“கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்”
மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள
**G-Pay** மூலம் சந்தா செலுத்த
91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும்,
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
‘கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்’
( Christian Historical Society )
என்ற பெயரில் எடுக்கவும்

மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

Name : Christian Historical Society
A/c Number : 1748 020000 4906
Bank name : Federal Bank
IFSC code : FDRL0001748

BANK

**Contact Us**


கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001

G Pay

christianhistorical@gmail.com

+91 91767 80001 christianhistoricalsociety.in tchsportal.co.in



## கர்த்தர்+பிள்ளை+ஊர்

# திருச்சபையின் தொடக்ககால வரலாறு

ஜா.ஜான் ஞானராஜ்
திருநெல்வேலி

மேற்கு தொடர்ச்சி மலையடிவாரத்தில் 1790 இல் உருவாக்கப்பட்ட ஒன்றுபட்ட திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்து 2019 இல் பிரிக்கப்பட்ட தென்காசி மாவட்டத்தின் தெற்கு எல்லை கிராமமாக, கடனாநதி எனும் கருணையாற்றின் தென்கரையில் சுற்றிலும் வற்றாத குளங்கள் எனும் நீர்நிலைகள் மற்றும் பசுமைமிகு வயல்கள் என இயற்கை எழில் சூழ்ந்த ஓர் கிராமம் கருத்தப்பிள்ளையூர்.

### அறிமுகம்

தென்காசி மாவட்டம் தென்காசி தாலுகாவில் மேல ஆம்பூர் ஊராட்சியின் தலைமை இடமாக கருத்தப்பிள்ளையூர் காணப்படுகிறது. இந்த ஊராட்சிக்கு உட்பட்ட ஊராட்சி அலுவலகம் மற்றும் பிற அலுவலகங்களும் இக்கிராமத்திலேயே உள்ளது. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மேல ஆம்பூர் ஊராட்சியின் மொத்த மக்கள் தொகை 4,385 அதில் ஆண்கள் 2, 194 மற்றும் பெண்கள் 2, 191

### பெயர் காரணம்

கர்த்தருடைய பிள்ளைகள் வாழும் ஊர் கர்த்தர்+பிள்ளை+ஊர் = கர்த்தர்பிள்ளையூர் என்பதே பேச்சு வழக்கில் கருத்தப்பிள்ளையூர் என தற்போது வழங்கப்படுகிறது. ஊர்மக்கள் அனைவரும் 300 ஆண்டுகளுக்கு முன்பு கத்தோலிக்க கிறிஸ்தவத்தை முழுமையாக ஏற்ற போது தங்கள் ஊருக்கு கர்த்தர் + பிள்ளை + ஊர் என்ற அடையாளப் பெயரையும் சூட்டிக்கொண்டனர். கடந்த ஆண்டு தங்களது ஊரின் பெயர் பழங்காலத்தைப் போன்று கர்த்தர்பிள்ளையூர் என அழைக்கப்பட வேண்டும் என போராட்டத்தையும் அவர்கள் முன்னெடுத்தனர். இவ்வூரின் கீழ் பகுதி கல்யாணிபுரம் என பழங்கால முதல் அழைக்கப்பட்டு வருகிறது.

### சமூக சூழல்

நாடார்கள், கத்திப்பிள்ளைமார்கள் மற்றும் மீனவ பரதவர்கள் ஆகிய மூன்று சமூகத்தினரே இக்கிராமத்தின் பூர்வகுடி மக்கள் ஆவர். பிற்காலத்தில் இக்கிராமத்தாருக்கு சொந்தமாக இருந்த பல்லாயிரக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்களில் விவசாயப் பணிகளைச் செய்வதற்காக தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் இம்மூன்று சமூகத்தினரால்

குடியேற்றப்பட்டுள்ளனர்.

## கருத்தப்பிள்ளையூர் கிராமத்தாரின் குடியேற்றமும் பூர்வீகமும்

கத்திப்பிள்ளைமார்கள் சுமார் 375 ஆண்டுகளுக்கு முன்பு மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்த திருமலை நாயக்கரின் (1584 - 1659) ஆட்சிக் காலத்தில் (1623 - 1659) படைத்தளபதியாக, திவானாக, திருநெல்வேலி மண்டல ஆளுநராகப் பணி செய்தவர் திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கத்தை அடுத்த இறையூரைச் சொந்த ஊராகக் கொண்ட வடமலையப்பபிள்ளை என்ற வடமலையாப் பிள்ளை. அவரால் சேர நாட்டிற்கும் தங்களுக்குமான எல்லையைப் பாதுகாக்க மதுரையை அடுத்துள்ள மண்டலமாணிக்கத்தில் இருந்து கத்திப்பிள்ளைமார்கள் இக்கிராமத்தில் குடியேற்றப்பட்டனர் என்பது செவிவழிச் செய்தியாக இங்கு சொல்லப்படுகிறது.

குடியேறிய அனைவரது வீட்டிலும் வாள் மற்றும் பெரிய கத்தி இருந்தது. அதனால் தங்களுக்கு கத்திப்பிள்ளைமார் என்ற பெயர் வந்தது என 1925 இல் இக்கிராமத்தில் பிறந்து, வளர்ந்து பிற்காலத்தில் கல்லிடைக்குறிச்சியில் தொழில் காரியமாக நீண்ட பல ஆண்டுகள் வசித்த திரு. A. டேவிட் அவர்கள் குறிப்பிடுகிறார். மேலும் கத்திப்பிள்ளைமார் என்றழைக்கப்படும் தாங்கள் மூப்பனார் என்ற அடையாளப் பெயர் கொண்ட சுருதிமான் பிரிவு பார்க்கவ குல உடையார் சமூகத்தவர் என இவர் தெரிவிக்கிறார்.

## தொடக்ககாலத்தில் கத்திப்பிள்ளைமார்கள்

மேல வீடு, நடு வீடு, கீழ வீடு என மூன்று குடும்ப வளசல்களாகக் குடியேறினர். பின்னர் அவர்களோடு சேர்ந்து கொண்ட குடும்பத்தினர்கள் சேர் வீடு எனப்பட்டனர். இவ்வாறு அமைவிடம் சார்ந்த குடும்பப் பெயரால் அவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். கருத்தப்பிள்ளையூரின் கீழ் பகுதியில் (கல்யாணிபுரம்) வசிக்கும் இவர்கள் பணகுடி, களக்காடு, கடையம், செங்கோட்டை, விக்கிரமசிங்கபுரம் மதுரை ஆகிய ஊர்களோடு நெருங்கிய திருமண உறவு கொண்டவர்களாக காணப்படுகின்றார்கள். இன்று 100 கத்திப்பிள்ளைமார் குடும்பங்கள் இங்கு வசிக்கிறார்கள்.

## நாடார்கள்

கத்திப்பிள்ளைமார்கள் குடியேறிய அதே காலகட்டத்தில் சிவகிரி, சேத்தூர் வட்டாரத்தில் வசித்து வந்த நாடார்களுக்கு அந்தப் பகுதியில் வசித்து வந்த மறவர்களிடமிருந்து அச்சுறுத்தல்களும், இடையூறுகளும் அதிகரித்துக் கொண்டே வந்தது. ஆதலால் அந்த வட்டாரத்தைச் சார்ந்த நாடார்கள் குழுவாக தங்களது சமூகத்தினர் அடர்த்தியாக வசிக்கும் தென்பகுதி நோக்கி இடப்பெயர்ச்சி செய்தனர், ஒருநாள் இரவில் அங்கிருந்து புறப்பட்ட அவர்கள் கருத்தப்பிள்ளையூருக்கு குழுவாக வந்து குடியேறினார்கள். பெருங்குழுவாக வந்த அவர்களும் கீழ வீடு, நடு வீடு, மேல வீடு என அமைவிடங்களை அமைத்துக் கொண்டதாக கருத்தப்பிள்ளையூர் நாடார் சமூக பெரியவர் திரு. சிமியோன் தனராஜ் குறிப்பிடுகிறார்கள். மூன்று பெரும் குடும்பங்களாக அவர்களைச் சார்ந்த சகோதர, சகோதரிகளின் குடும்பங்களாக குழுவாகக் கருத்தப்பிள்ளையூரில் குடியேறிய நாடார்கள் கடனாநதி அணைக்கட்டு முதல் ஆம்பூர் ரயில்வே கேட் வரையிலான இருபோகம் நெல் விளையும் நீர் செழிப்பு மிக்க பாசன வயல் நிலங்களைச் சுதந்தரித்துக் கொண்டார்கள்.

தங்களுக்குள்ளேயே நீண்ட பல ஆண்டுகள் திருமண உறவுகளை இவர்கள் கொண்டிருந்தனர். தங்களைச் சுற்றி வாழ்ந்த பிற நாடார் கிராமங்களோடு இவர்கள் திருமண உறவுகளைத் தொடக்க காலத்தில் கொண்டிருக்கவில்லை. சுற்றியுள்ள நாடார் கிராமங்களில் இருந்து கருத்தப்பிள்ளையூரிலுள்ள தங்கள் குடும்பத்தில் திருமணம் செய்கிறவர்களுக்கு சீதனமாக வயல் நிலங்களையும் குடியிருக்க வீட்டு மனை நிலங்களையும் கொடுத்து தங்களுடனேயே அவர்களைக் குடியிருக்கச் செய்தார்கள். விவசாயப் பணிகளையும் பனையேற்று தொழிலையும் செய்ததோடு இவர்கள் கொடி காவலர் எனும் படைவீரராகச் செயல்பட்டார்கள். இன்று சுமார் 1200 நாடார் குடும்பத்தினர் இங்கு வசிக்கின்றார்கள்.

## மீனவ பரதவர்கள்

கத்திப்பிள்ளைமார்களும், நாடார்களும் கருத்தப்பிள்ளையூரில் குடியேறிய அதே காலகட்டத்தில் கத்தோலிக்க கிறிஸ்தவத்தை ஏற்றிருந்த கடற்கரை கிராம மீனவ பரதவர்கள் மீன் கருவாடு வியாபாரம் செய்வதற்காக குழுவாக 16 மற்றும் 17ஆம் நூற்றாண்டுகளில் உள்நாட்டு கிராமங்களில் குடியேறி வந்தனர். அவ்வாறு குடியேறியவர்கள் கல்லிடைக்குறிச்சி, விக்கிரமசிங்கபுரம், கருத்தப்பிள்ளையூர், பொட்டல்புதூர் கிராமங்களில் குடியேறினார்கள். இவர்களால் கருத்தப்பிள்ளையூரில் மீனவ பரதவர்கள் குடியேற்றம் ஏற்பட்டது. கருத்தப்பிள்ளையூரில் குடியேறிய இவர்களின் எண்ணிக்கை நாடார்களையும், கத்திப் பிள்ளைமார்களையும் ஒப்பிடும்போது குறைவாகவே இருந்தது. இன்று மீனவ பரதவர்கள் கருத்தப்பிள்ளையூரில் இல்லை.

## கருத்தப்பிள்ளையூரில் கத்தோலிக்க கிறிஸ்தவம்

கருத்தப்பிள்ளையூரில் குடியேறிய மீனவ பரதவர்கள் தூய. அந்தோனியார் சுரூபத்தைப் பீடத்தில் திருநிலைப்படுத்தி பனை ஓலையை மேற்கூறையாகக் கொண்ட தூய. அந்தோனியார் தேவாலயத்தை அமைத்துக் கொண்டனர். கருத்தப்பிள்ளையூரில் குடியேறிய இவர்களுக்கு கிறிஸ்தவ போதனைகளை செய்வதற்காக கத்தோலிக்க கிறிஸ்தவ போதகர்கள் கருத்தப்பிள்ளையூருக்கு வருகை தந்தனர். அவர்கள் மூலமாக கத்திப்பிள்ளைமார்கள் மற்றும் நாடார்கள் மத்தியில் கருத்தபிள்ளையூரில் கிறிஸ்தவ மதம் பரவியது. வெகுவிரைவில் கருத்தப்பிள்ளையூரைச் சார்ந்த நாடார்கள் மற்றும் கத்திப்பிள்ளைமார்கள் முழுமையாக கத்தோலிக்க கிறிஸ்தவத்தை ஏற்றார்கள். பாளையங்கோட்டை கத்தோலிக்க கிறிஸ்தவ மறைமாவட்டத்தின் புள்ளிவிபரப்படி சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு இக்கிராமத்தார் அனைவரும் கிறிஸ்தவர்கள் ஆனார்கள் என்ற குறிப்பை மாத்திரமே பார்க்க

முடிகிறது. எந்த கத்தோலிக்க மிஷனரியின் காலம் என்பது குறித்தும் எந்த ஆண்டு என்பது குறித்தும் அறிந்து கொள்ள இயலவில்லை.

## கருத்தப்பிள்ளையூர் நாடார்களின் மத்தியில் கத்தோலிக்க கிறிஸ்தவம்

கருத்தப்பிள்ளையூர் நாடார்களின் மத்தியில் ரேனியஸ் ஐயரவர்களின் வருகைக்கு (1828) முன்பாகவே கத்தோலிக்க கிறிஸ்தவம் பரவியது தொடக்கத்தில் கத்தோலிக்க கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்ட மாடசாமி என்ற மிக்கேல் நாடாரின் நேரடி வழிமரபைச் சேர்ந்த திரு. பால் சாமுவேல் மற்றும் திரு. ஜேக்கப் ஆகியோர் கீழ்க்கண்டவாறு பகிர்ந்து கொள்கிறார்கள்.

'கருத்தப்பிள்ளையூரில் சுமார் 1500 ஏக்கர் நிலம் கொண்ட பெருநிலக்கிழார் மாடசாமி நாடார், அவர் நாடார்கள் கத்தோலிக்க கிறிஸ்தவத்தை ஏற்ற போது மிக்கேல் என்ற பெயரில் ஞானஸ்நானம் பெற்றார். அவருக்கு மூன்று பிள்ளைகள் மி. தொம்மை குரூஸ் நாடார், மி. சூசை உபதேசியார் மி. இராயப்பநாடார், மூவரும் தமது தந்தையின் சொத்தில் தங்களுக்கு என தனித்தனியாக சுமார் 500 ஏக்கர் இரு போக பாசன வயல் நிலங்களைக் கொண்டிருந்தனர். மூவரது வீடுகளும் ஜமீன்தார் வீடுகளைப் போன்று உயர்ந்ததும் பெரியதுமாக இருந்தது. மூவரில் மூத்தவரான மி. தொம்மை குரூஸ் மற்றும் இளையவரான மி. இராயப்பன் ஆகிய இருவரும் ப்ராட்டஸ்டண்ட் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டனர். நடுவில் உள்ள சூசை உபதேசியார் மட்டும் தனது தந்தை வழியில் கத்தோலிக்க கிறிஸ்தவத்திலேயே நிலைத்திருந்தார். இம்மூவரது வீடுகள் மேல வீடு, நடு வீடு, கீழ வீடு என அழைக்கப்பட்டது.

## இடைக்கால குடும்பப் புள்ளிவிபரம்

மீனவ பரதவர்கள் கருத்தப்பிள்ளையூரை விட்டு வெளியேறும் முன்பாக கருத்தப்பிள்ளையூரில் 40 வீட்டு நாடார்கள், 16 வீட்டு கத்திப்பிள்ளைமார்கள், 6 வீட்டு பரதவர்கள் கருத்தப்பிள்ளையூரில் வசித்து வந்தனர் என்ற இடைக்கால புள்ளிவிபரத்தை அறிந்து கொள்ள முடிகிறது.

## மீனவ பரதவர்கள் வெளியேறுதல்

இடைக்காலத்தில் மீனவ பரதவ சமூகத்தினர் படிப்படியாக இக்கிராமத்தில் இருந்து வெளியேறத் தொடங்கினர். அவர்களில் ஒரு பகுதியினர் விக்கிரமசிங்கபுரத்தில் வசிக்கிறார்கள். 1828 இல் ரேனியஸ் ஐயரவர்கள் கருத்தப்பிள்ளையூருக்கு நற்செய்தி அறிவிக்க வந்த நேரத்தில் ஒரு முக்கியமான சம்பவம் இங்கு நடைபெற்றது. அது என்னவென்றால் கருத்தப்பிள்ளையூர் தூய. அந்தோனியார் தேவாலய பீடத்தில் இருந்த சுரூபத்தில் இருந்து வைக்கோல் வெளிவரத் தொடங்கியது. தாங்கள் வழிபட்டு வந்த சுரூபத்தில் இருந்து வைக்கோல் வெளி வந்ததைக் கண்ட கருத்தப்பிள்ளையூர் சபை மக்கள் அதிர்ச்சியும், கலக்கமும், மனவருத்தமும் அடைந்தனர். இச்சம்பவமே இவ்வூரில் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் பிராட்டஸ்டன்ட் கிறிஸ்தவத்தை ஏற்க முக்கிய காரணமாக இருந்தது.

## கருத்தப்பிள்ளையூரில் ரேனியஸ் ஐயரவர்களின் நற்செய்தி அறிவிப்புப் பணி

சுரூபத்தில் இருந்து வைக்கோல் வெளிவந்த சம்பவம் நடைபெற்ற நேரத்தில் ரேனியஸ் ஐயரவர்கள் 1828 இல் கருத்தப்பிள்ளையூருக்கு வந்து அறிவித்த சுரூப வழிபாடு அற்ற பிராட்டஸ்டண்ட் கிறிஸ்தவ நற்செய்தியை அறிவித்தார். கருத்தப்பிள்ளையூர் மக்களையும், கல்யாணிபுரத்து மக்களையும் வெகுவாகக் கவர்ந்தது. மக்கள் பிராட்டஸ்டன்ட் கிறிஸ்தவத்தை ஏற்கத் தொடங்கினர்.

## கருத்தப்பிள்ளையூர் கல்யாணிபுரத்தில் CMS சபை தோன்றவும் சபை மாறுதல் ஏற்படவும் காரணமாக இருந்த சம்பவம்

கத்தோலிக்க கிறிஸ்தவத்தில் இருந்து சீர்திருத்த கிறிஸ்தவத்திற்கு கருத்தப்பிள்ளையூர் கல்யாணிபுரம் கத்திப்பிள்ளைமார்கள் செல்ல காரணமாக இருந்த சம்பவத்தை செவிவழிச் செய்தியாக தாம் அறிந்ததை திரு. A. டேவிட் அவர்கள் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்கள். 'அக்காலத்தில் இங்கு பணிசெய்த கத்தோலிக்க கிறிஸ்தவ போதகர் சாதிக்குள்ளேயே திருமணம் செய்வதைக் கிறிஸ்தவர்கள் கைவிட வேண்டும். பிற சமூகத்தினரோடு திருமண உறவு வைக்க வேண்டும் என வலியுறுத்தியதோடு அதை நடைமுறைப்படுத்தவும் செய்தார்கள். கத்திப்பிள்ளைமார்கள் மற்றும் மீனவபரதவர் இடையே போதகர் கலப்பு திருமணத்தை நடத்தி வைத்தார். அதனால் அதிர்ச்சி அடைந்த தம் சமூகத்தினர் தங்களது சாதித் தனித்துவத்தைப் பேண வேண்டும் என்ற மனநிலை சூழலில் இருந்தனர் என்றும் அந்நேரம் கனம். ரேனியஸ் வருகை தந்ததாகவும் தங்களுக்கு நற்செய்தி அறிவித்த கனம். ரேனியஸ் ஐயரவர்களிடத்தில் தங்களது சமூகத்தாரை மட்டும் உள்ளடக்கி கல்யாணிபுரத்தில் தங்களுக்கென தனி சபை உருவாக்கப்பட்டால் தங்கள் சமூகத்தினர் அனைவரும் புராட்டஸ்டண்ட் கிறிஸ்தவர்களாகி விடுவோம் என பேசியதாகவும் அதற்கு ரேனியஸ் ஒப்புக் கொண்டதால் ஒட்டுமொத்தமாக புராட்டஸ்டண்ட் கிறிஸ்தவத்தை தம் சமூகத்தினர் ஏற்றார்கள்' எனும் பாரம்பரிய செவிவழிச் செய்தியைக் குறிப்பிடுகிறார்.

## ரேனியஸ் மூலம் தனித்தனி சபை உருவாகுதல்

1828 இல் நெல்லை அப்போஸ்தலர் ரேனியஸ் ஐயரவர்களின் நற்செய்திப் பணி மூலம் கல்யாணிபுரத்திலும், கருத்தப்பிள்ளையூரிலும் தனித்தனி சபைகள் உருவானது. கல்யாணிபுரம் சபை மூப்பர் வீட்டில் இரண்டு சபைகளையும் சேர்ந்த சபைமக்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஆராதனையை முதலில் நடத்தினர். தொடக்கத்தில் இரு இடங்களிலும் தேவாலயம் கட்டப்படவில்லை.

## CMS தொடக்கப் பள்ளிக்கூடம் தொடங்கப்படுதல்

கனம். ரேனியஸ் ஐயரவர்களால் தொடங்கப்பட்ட CMS பள்ளிக்கூடம் முதலில் கல்யாணிபுரத்தில் அமைந்திருந்தது.

கருத்தப்பிள்ளையூரிலிருந்து பிள்ளைகள் கல்யாணிபுரம் தொடக்கப்பள்ளிக்கு வந்து கல்வி கற்று வந்தனர். 1932-1938 க்கு உட்பட்ட காலத்தில் கருத்தப்பிள்ளையூர் சபை ஊழியர் திரு. J. தேவாசீர்வாதம் உபதேசியார் இப்பள்ளியில் தலைமை ஆசிரியராகவும், கல்யாணிபுரம் சபை ஊழியர் திரு. சாமுவேல் பிள்ளை உபதேசியார் உதவி ஆசிரியராகவும் இப்பள்ளியில் இருந்தனர் என்றும் அந்த சி. எம். எஸ் தொடக்கப் பள்ளி கல்யாணிபுரத்தில் ஈராசிரியர் பள்ளியாக இருந்த போது தாம் அதில் கல்வி கற்றதை நினைவு கூறும் திரு. A. டேவிட் அவர்கள் பிற்காலத்தில் கல்யாணிபுரத்தில் பிள்ளைகள் வருகை குறைந்ததை முன்னிட்டு அப்பள்ளி கருத்தப்பிள்ளையூர் சி. எம். எஸ். தேவாலயத்திற்கு அருகில் மாற்றப்பட்டது என்பதையும் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

## சபை ஊழியர் நியமனம்

கருத்தப்பிள்ளையூர் மற்றும் கல்யாணிபுரம் ஆகிய இரு சபைகளிலும் ஒரே நேரத்தில் இக்னேஷியஸ் எனும் உபதேசியார் பணி செய்ததாகக் குறிப்பிடும் சபை ரேனியஸ் ஐயரவர்கள் இக்னேஷியஸ் என வானரமுட்டியில் ஒரு உபதேசியார் இருந்தமையால் கருத்தப்பிள்ளையூர் மற்றும் கல்யாணிபுரம் ஆகிய இரு சபைகளிலும் பணி செய்த இக்னேஷியஸ் உபதேசியாரைக் குறிப்பிடுகையில் அவரது மனைவியின் பெயர் தேவசகாயம்மாள் என்பதைக் குறிப்பிட்டுக் காட்டுகிறார்.

ரேனியஸ் ஐயரவர்களால் கருத்தப்பிள்ளையூர் சபை வளர்ச்சி பெற்றதும், கருத்தப்பிள்ளையூர் சபைக்கென தனி சபை ஊழியர் ஆக தேவசகாயம் உபதேசியார் - அந்தோணியம்மாள் தம்பதியர் நியமிக்கப்பட்டார்கள். இதை CMR இல் ரேனியஸ் குறிப்பிடுகிறார்.

## 1835 ஆம் ஆண்டு ஊழியர்களின் சுற்றுப்பயணத்தின்போது திருச்சபையின் நிலை

பெற்றிட், சார்ஜென்ட், தேவசகாயம் ஆகிய மூன்று மிஷனரிகளும் இணைந்து மிஷனரி சுற்றுப்பயணம் செய்தபோது 22. 07. 1835 அன்று கருத்தப்பிள்ளையூர் கலியாணிபுரத்திற்கு மூவரும் வருகை தந்தார்கள். அந்நேரம் கல்யாணிபுரம் திருச்சபையைக் குறித்து சிறப்பான சாட்சியைக் கீழ்க்கண்டவாறு பகிர்ந்து கொள்கிறார்கள். 'கல்யாணிபுரம் வெகு நேர்த்தியான சபை, சபை மக்கள் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் காணப்படுகிறார்கள். இங்கு ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்களாயிருந்து வந்தவர்களே நமது சபை மக்கள்.'

## ரேனியஸ் தம் இறுதிக் காலத்தில் கருத்தப்பிள்ளையூர்-கல்யாணிபுரத்திற்கு தந்த வருகை

1835 இல் CMS மிஷனரி சங்கத்திலிருந்து கனம். ரேனியஸ் ஐயரவர்கள் நீக்கப்பட்டார்கள். அதைத்தொடர்ந்து ஆற்காட்டை மையமாகக்கொண்டு ஜெர்மன் இவாஞ்சலிக்கல் மிஷன் என்ற ஊழியத்தை தமது ஐரோப்பிய நண்பர்களின் உதவியுடன் தொடங்கி பணிசெய்த போது திருநெல்வேலியில் இருந்து உபதேசிமார்கள் திருநெல்வேலிக்கு ரேனியஸ் மீண்டும் திரும்பி வரும்படி கண்ணீர் கடிதங்கள் எழுதியதால் 1835 இறுதியில் ரேனியஸ் ஐயரவர்கள் திருநெல்வேலிக்குத் திரும்பினார்கள். ரேனியஸ் சிந்துபூந்துறையில் தேவாலயம் கட்டினார். அதன் அருகில் ஒரு மிஷன் பங்களா கட்டி அதில் தங்கியிருந்து ஊழியத்தைத் தொடர்ந்தார். அப்போது தம்மை அதிகமாக நேசித்த மேல் பக்கத்து திருச்சபைகளை சந்திக்கும் நோக்குடன் மிஷன் சுற்றுப்பயணம் செய்து வந்த போது 1837 ஏப்ரலில் கல்யாணிபுரம், கருத்தப்பிள்ளையூர் சபைகளைச் சந்தித்தார்.

கருத்தப்பிள்ளையூர் சபையில் இருந்த 11 விசுவாச குடும்பத்தாரில் ஒருவர் பின் வாங்கியது போக மீதமிருந்த 10 குடும்பத்தாருக்கு விசுவாசத்தில் உறுதிப்படும்படி போதனைகள் அளித்ததாகவும், கல்யாணிபுரம் திருச்சபை மக்கள் காணிக்கை காரியத்தில் நிர்விசாரமாக இருந்ததைத் தாம் கண்டித்ததாகவும் 1837 ஏப்ரல் மாத சர்ச் மிஷனரி ரிப்போர்ட்டில் ரேனியஸ் குறிப்பிடுகிறார். பின்னர் கருத்தப்பிள்ளையூரில் இருந்து பாபநாசம் சென்று அந்நேரம் அங்கு நடந்து கொண்டிருந்த சித்திரை திருவிழாவில் பங்கேற்ற பல்லாயிரக்கணக்கான மக்களுக்குத் தாம் நற்செய்தி அறிவித்ததையும் ரேனியஸ் அதில் குறிப்பிடுகிறார்.

## தொடக்க கால கருத்தப்பிள்ளையூர் திருச்சபையின் படிப்படியான வளர்ச்சி

1912 திருமண்டல வருமானச் சுருக்கக் கணக்கு சங்க இன வழிப்படி கருத்தப்பிள்ளையூரில் ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவர்கள் - 147, திடப்படுத்தல் பெற்ற பரி. நற்கருணைக்காரர்கள் - 38.

1913 திருமண்டல சங்க இன வழிப்படி கருத்தப்பிள்ளையூரில் ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவர்கள் - 163, திடப்படுத்தல் பெற்ற பரி. நற்கருணைக்காரர்கள் - 39. இந்த காலகட்டத்தில் கருத்தப்பிள்ளையூர் திருச்சபையின் மூப்பராக திரு. மி. தொம்மை குரூஸ் நாடார் திரு. மி. ராயப்பன் நாடார் இருந்துள்ளனர். இக்கிராமத்தையொட்டி உள்ள கல்யாணிபுரம் திருச்சபையின் மூப்பராக இக்காலத்தில் திரு சாந்தப்பன் சேர்வைக்காரர் இருந்துள்ளார். இந்த காலகட்டத்தில் கருத்தப்பிள்ளையூர் கத்தோலிக்க கிறிஸ்தவ திருச்சபையின் மூப்பராக திரு. மி. சூசை உபதேசியாரும் அவரது மகன் அந்தோனிமுத்துவும் இருந்துள்ளனர். இவர்களால் கத்தோலிக்க தேவாலயத்திற்கு வயல் நிலங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

1930 திருமண்டல வருமானச் சுருக்கக் கணக்குப்படி கருத்தப்பிள்ளையூரில் ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவர்கள் - 174, திடப்படுத்தல் பெற்ற பரி. நற்கருணைக்காரர்கள் - 74 இந்த காலகட்டத்தில் கருத்தப்பிள்ளையூர் திருச்சபையின் மூப்பராக திரு. R. M. முத்தையா நாடார் இருந்துள்ளார். இக்கிராமத்தையொட்டி உள்ள கல்யாணிபுரம் திருச்சபையின் மூப்பராக இக்காலத்தில் திரு. சின்னப்பா பிள்ளை இருந்துள்ளார்.

## இடைக்கால சபை ஊழியர்கள்

கருத்தப்பிள்ளையூர் தூய. தோமா ஆலய திருச்சபையில் 1920 முதல் 1926 வரையும் அதன்பின் 1932 முதல் 1938 வரையும் ஆக சுமார் 12 ஆண்டுகள் கல்லிடைக்குறிச்சியைச் சேர்ந்த திரு. J. தேவாசீர்வாதம் உபதேசியார் அவர்கள் சபை ஊழியராக சிறப்பாக பணி செய்துள்ளார்கள். இவர்கள் இங்கு தங்கி பணி செய்த போது அனுதினமும் காலை கருத்தப்பிள்ளையூரை ஒட்டி வடபகுதியில் செல்லும் கடனாநதி எனும் கருணையாற்றில் குளிப்பது வழக்கம். அவ்வாறு ஒரு முறை குளித்துக் கொண்டிருந்தபோது பெரும் வெள்ளம் ஆற்றில் வரப்போவதை ஆண்டவர் அவர்களுக்கு உணர்த்தினார் உடனடியாக தேவாசீர்வாதம் உபதேசியார் ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த ஏராளமான பேரிடம் பெரிய வெள்ளம் ஆற்றில் வரப்போகிறது ஆதலால் உடனடியாக அனைவரும் ஆற்றை விட்டு வெளியேறி கரையேறுங்கள் என வேண்டுகோள் விடுத்தார்கள் தேவாசீர்வாதம் உபதேசியார் அவர்களின் வேண்டுகோளை அப்படியே கேட்டு உடனடியாக ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த அனைவரும் ஆற்றை விட்டு வெளியேறினார்கள். அனைவரும் வெளியேறிய சில நிமிடங்களில் பெரியதோர் வெள்ளம் அந்த ஆற்றில் கடந்து வந்தது. அக்காலத்தில் கடனாநதியில் அணை கட்டப்படவில்லை. இந்த சம்பவம் இன்றளவும் நினைவு கூறப்படுகிறது. தேவாசீர்வாதம் உபதேசியார் அவர்களுக்குப் பின் 1838 முதல் சில ஆண்டுகள் J. தேவாசீர்வாதம் உபதேசியாரின் அத்தை மகனும் கல்லிடைக்குறிச்சியைச் சார்ந்தவருமான திரு. V. காலேப் யோசுவா உபதேசியார் இங்கு சபை ஊழியர் ஆக சிறப்பாக பணி செய்துள்ளார்கள். இதே காலகட்டத்தில் கல்யாணிபுரத்தில் சபை ஊழியராக திரு. சாமுவேல் பிள்ளை உபதேசியார் இருந்துள்ளார்.

## கல்யாணிபுரம் திருச்சபையின் படிப்படியான வளர்ச்சி

1912 திருமண்டல சங்க இன வழிப்படி கல்யாணிபுரத்தில் ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவர்கள் - 123, திடப்படுத்தல் பெற்றவர்கள்-37. 1913 திருமண்டல சங்க இன வழிப்படி கல்யாணிபுரத்தில் ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவர்கள் - 133, திடப்படுத்தல் பெற்றவர்கள் - 40.

1963 திருமண்டல சங்க இன வழிப்படி கல்யாணிபுரத்தில் ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவர்கள் - 125, திடப்படுத்தல் பெற்றவர்கள் - 70

1998 திருமண்டல சங்க இன வழிப்படி கல்யாணிபுரத்தில் ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவர்கள் - 261, திடப்படுத்தல் பெற்றவர்கள் - 150.

## கருத்தப்பிள்ளையூர் திருச்சபையின் இடைக்கால வளர்ச்சி

1963 திருமண்டல வருமானச் சுருக்கக் கணக்குப்படி கருத்தப்பிள்ளையூரில் ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவர்கள் - 370, திடப்படுத்தல் பெற்றவர்கள் - 173.

1998 திருமண்டல வருமானச் சுருக்கக் கணக்குப் படி கருத்தப்பிள்ளையூரில் ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவர்கள் - 484, திடப்படுத்தல் பெற்றவர்கள் - 260.

## வெளிநாடு சென்று பொருளீட்டுதல்

1900 தொடக்கத்தில் இக்கிராமத்தார் பர்மா, மலேசியா போன்ற இடங்களுக்கு பொருளீட்டும்படி சென்றுள்ளனர்.



அங்கிருந்து இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற காலங்களில் சொந்த ஊருக்கு திரும்பி உள்ளனர்.

## தூய. அந்தோணியார் தேவாலயம்

கருத்தப்பிள்ளையூர் தூய. அந்தோணியார் தேவாலயம் சுமார் 300 ஆண்டுகளுக்கு மேல் பழமைவாய்ந்து. கருத்தப்பிள்ளையூர் கிராமத்தின் தொடக்கத்தில் இத்தேவாலயம் காணப்படுகிறது. கருத்தப்பிள்ளையூர் கல்யாணிபுரம் ஆகிய கிராமத்தார் அனைவருக்கும் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பாக இந்த ஒரே ஒரு தேவாலயமே இருந்தது. சுமார் நூறு ஆண்டுகளாக இந்த ஒரே தேவாலயத்திலேயே அனைவரும் வழிபட்டு வந்தனர். முதலில் பனை ஓலையால் மேற்கூறை அமைக்கப்பட்ட தேவாலயம் இருந்தது. பின்னர் அது காரைக் கட்டிட தேவாலயமாக மாற்றப்பட்டது. தென்காசி பங்கின் கீழ் கருத்தப்பிள்ளையூர் இருந்த போது தென்காசி பங்கு தந்தையாக இருந்த இயேசு சபை குருவான தந்தை. பாப்பையா சுவாமிகள் கருத்தப்பிள்ளையூர் கிராமம் பொருளாதாரத்திலும் கல்வி வளர்ச்சியிலும் மேம்படுவதற்கு அயராது பாடுபட்டார்கள். கருத்தப்பிள்ளையூரின் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் ஒன்றாக அமர்ந்து ஆராதிக்க போதுமானதாக இல்லாததால் அதை விரிவாக்கம் செய்ய தென்காசி பங்கின் கீழ் கருத்தப்பிள்ளையூர் இருந்த போது தீர்மானிக்கப்பட்டது. அப்போதைய பங்கு தந்தையான தந்தை பீட்டர் ராய் அவர்கள் விரிவாக்கப் பணிகளுக்கு என பெரிய அளவில் பணத்தை சேகரித்து வைத்து சென்றிருந்தார்.

1944 கருத்தப்பிள்ளையூர் தனி பங்காக மாறியது. பங்கு தந்தையாக இருந்த தந்தை அல்போன்ஸ் அவர்கள் தேவாலய விரிவாக்கப் பணிகளை தொடங்கி சிறப்புற செய்து வந்தார்கள். அந்த விரிவாக்கப் பணி பங்கு தந்தையான தந்தை இருதயம் அவர்கள் காலத்தில் சிறப்பாக நிறைவு பெற்றது. இந்த விரிவாக்கப்பட்ட தேவாலயத்தில் கடந்த ஆண்டு

வரை சிறப்பாக வழிபாடுகள் நடைபெற்றது. விரிவாக்கப்பட்ட தேவாலயம் வளர்ந்து வந்த கருத்தப்பிள்ளையூர் திருச்சபைக்கு போதுமானதாக இல்லாததால் விரிவாக்கப்பட்ட தேவாலயம் முழுவதுமாக அகற்றப்பட்டு தற்போது புதியதோர் தேவாலயம் அதே இடத்தில் கட்டப்பட்டு வருகிறது. தற்போது கருத்தப்பிள்ளையூர் பங்கில் ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பத்தினர் உள்ளனர். பாளையங்கோட்டை மறைமாவட்டம் சார்பில் தொடக்கப்பள்ளியும், மேல்நிலைப் பள்ளியும் இங்கு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

## தூய தோமா ஆலயப் பிரதிஷ்டை

கருத்தப்பிள்ளையூர் தேவாலயக் கட்டுமானப் பொறுப்பாளராக அக்காலத்து சபையின் மூப்பராக இருந்த திரு. தொம்மை குரூஸ் சிறப்பாக செயல்பட்டார்கள். தொம்மை குரூஸ் கருத்தப்பிள்ளையூரில் சிரமப்பட்டு சிறப்பாக தேவாலயத்தைக் கட்டி வருகிறார் என சார்ஜென்ட் பேராயர் குறிப்பிட்டுள்ள வரலாற்று குறிப்பு சர்ச் மிஷன் ரிப்போர்ட்டில் (C-MR) உள்ளது. மேலும் தொம்மைகுரூஸ் கருத்தப்பிள்ளையூர் தேவாலயத்திற்கு என பெரிதான வயலை அன்பளிப்பாகத் வந்திருப்பதாகவும் அது மிஷன் பள்ளியில் பணி செய்யும் ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்க போதுமானதாக இருப்பதாகவும் சார்ஜென்ட் பேராயர் மிஷன் ரிப்போர்ட்டில் குறிப்பிடுகிறார்கள்.

சர்ச் மிஷன் டைரக்டரியில் கருத்தப்பிள்ளையூர் தேவாலயம் 250 பேர் அமர்ந்து ஆராதிக்கும் அளவில் உள்ளது என்ற குறிப்பு காணப்படுகிறது. தேவாலய கட்டுமானப்பணி சபை மக்கள் அனைவரின் ஒத்துழைப்பால் சிறப்பாக நடைபெற்றது சிறப்பாக கட்டிமுடிக்கப்பட்ட கருத்தப்பிள்ளையூர் தேவாலயம் 1893 இல் தூய. தோமா ஆலயம் என்ற பெயரில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அந்நேரம் அந்தோணிமுத்து உபதேசியார் என்பவர் சபை ஊழியராக இருந்துள்ளார். அந்த உபதேசியாரை நினைவு கூறும் வண்ணம் பிரதிஷ்டையின் போது மங்கள படைப்பு செய்யப்பட்ட ஞானஸ்நான தொட்டியில் 20 ஆண்டுகள் கருத்தப்பிள்ளையூரில் சபை ஊழியராக உபதேசியார் பணி செய்துள்ளார் என்ற குறிப்பு அதில் காணப்படுகிறது.

## கல்யாணிபுரம் தூய திரித்துவ ஆலய பிரதிஷ்டை

கல்யாணிபுரம் தேவாலய கட்டுமான பொறுப்பாளராக அக்காலத்து சபையின் மூப்பராக இருந்த திரு. சின்னப்பா அவர்கள் சிறப்பாக செயல்பட்டார்கள். தேவாலய கட்டுமானப்பணி சபை மக்கள் அனைவரின் ஒத்துழைப்பால் சிறப்பாக நடைபெற்றது சிறப்பாக கட்டிமுடிக்கப்பட்ட கல்யாணிபுரம் தேவாலயம் 10. 05. 1922 அன்று நெல்லை பேராயர் மகாகனம் உவாலர் அவர்களால் தூய. திரித்துவ ஆலயம் என்ற பெயரில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. சர்ச் மிஷன் டைரக்டரியில் கல்யாணிபுரம் தேவாலயம் 250 பேர் அமர்ந்து ஆராதிக்கும் அளவில் உள்ளது என்ற குறிப்பு காணப்படுகிறது.

## கருத்தப்பிள்ளையூர் சர்க்கிள்

தொடக்க காலம் முதல் கருத்தப்பிள்ளையூர் திருச்சபை நல்லூர் சர்க்கிளுடன் இருந்தது. 1943 இல் அம்பாசமுத்திரம் சர்க்கிள் உருவாக்கப்பட்ட உடன் அம்பாசமுத்திரம் சர்க்கிளின் கீழ் வந்தது. அம்பாசமுத்திரம் சர்க்கிள் அம்பாசமுத்திரம் சேகரத்தில் இருந்த விக்கிரமசிங்கபுரம் தனி சேகரமாக பிரிக்கப்பட்டபோது விக்கிரமசிங்கபுரம் சேகரத்துக்கு




உட்பட்ட சபையாக கல்யாணிபுரம் மாறியது. சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு கருத்தப்பிள்ளையூர் தனிசேகரமாக உருவாக்கப்பட்டபோது கருத்தப்பிள்ளையூர் சேகரத்தில் கல்யாணிபுரம் சபை உட்பட ஏழு சபைகள் சேர்க்கப்பட்டது.

## கல்யாணிபுரம் தூய. திரித்துவ ஆலயம்

கல்யாணிபுரம் தூய. திரித்துவ ஆலய நூற்றாண்டை முன்னிட்டு 2022 மே மாதம் பத்து நாட்கள் நூற்றாண்டு பண்டிகை சிறப்பாக கொண்டாடப்பட்டது. 10 நாட்களும் சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது 10 நாட்களும் உணவு வழங்கப்பட்டது. திரு. ஜா. ஜான் ஞானராஜ் அவர்கள் தொகுத்து எழுதிய கல்யாணிபுரம் சபை வரலாறு வெளியிடப்பட்டது. நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு தேவாலயம் சிறப்பாக புதுப்பிக்கப்பட்டது. தூய திரித்துவ ஆலயத்தின் அருகில் விழாக்கள் நடைபெறுவதற்கு சபா மண்டபம் கட்டப்பட்டுள்ளது. தேவாலயத்தில் கோபுரம் சிறப்பாக கட்டப்பட்டுள்ளது.

## TDTA தொடக்கப்பள்ளி புதிய கட்டிடம் பிரதிஷ்டை

கருத்தப்பிள்ளையூர் TDTA தொடக்கப்பள்ளி புதிய கட்டிடத்தை கருத்தப்பிள்ளையூர் சேகர தலைவர் மற்றும் பள்ளி தாளாளர் அருள்திரு. C. H. சத்தியநேசன் மற்றும் சேகர குருவானவர் அருள்திரு. N. ரைட்டஸ் தேவசகாயம் ஐயரவர்கள் ஆகியோரின் தலைமையில் சபை ஊழியர் திரு. K. இம்மானுவேல் ராபின்சன் அவர்களின் முன்னிலையில் நெல்லை திருமண்டலத்தின் லே செயலாளர் திரு. D. S. ஜெயசிங் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

## பல்நோக்கு சபா மண்டபம் பிரதிஷ்டை

கருத்தப்பிள்ளையூர் தூய. தோமா ஆலயத்தின்

முன்புறம் தெருவை அடுத்துள்ள கீழ் புறம் தூய. தோமா ஆலய பல்நோக்கு சபா மண்டபம் பல இலட்சம் ரூபாய் பொருட்செலவில் சிறப்பாகக் கட்டப்பட்டுள்ளது. இந்த பல்நோக்கு சபா மண்டபத் தரைத்தளத்தை அன்பளிப்பாக நெல்லை திருமண்டலத்தின் லே செயலாளர் திரு. D. S. ஜெயசிங் அவர்கள் அமைத்துக் கொடுத்துள்ளார்கள்.

கருத்தப்பிள்ளையூர் சேகர தலைவர் அருள்திரு. N. ரைட்டஸ் தேவசகாயம் ஐயரவர்களின் தலைமையில் சபை ஊழியர் திரு. K. இம்மானுவேல் ராபின்சன் அவர்கள் காலத்தில் நெல்லை பேராயர் மகாகனம். ARGST. பர்னபாஸ் அவர்கள் 11.02.2023 அன்று பிரதிஷ்டை செய்தார்.

## ஆலயம் மற்றும் புதிய கோபுரம் பிரதிஷ்டை

கருத்தப்பிள்ளையூர் புதுப்பிக்கப்பட்ட தூய. தோமா ஆலயம் மற்றும் புதிய கோபுரம் 01. 10. 2023 அன்று கருத்தப்பிள்ளையூர் சேகர தலைவர் அருள்திரு. N. ரைட்டஸ் தேவசகாயம் ஐயரவர்களின் தலைமையில் சபைஊழியர் திரு. K. இம்மானுவேல் இராபின்சன் அவர்கள் காலத்தில் நெல்லை பேராயர் மகாகனம். ARGST. பர்னபாஸ் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

## கருத்தப்பிள்ளையூர் சபையாரின் சிறப்பு நற்குணம்

தொடக்க காலம் முதலே கருத்தப்பிள்ளையூர் கல்யாணிபுரம் ஆகிய இரு CMS (CSI) திருச்சபை மக்களும் ஒருவருக்கொருவர் காண்பித்த திருச்சபை ஐக்கியம் இன்றளவும் தொடர்கிறது. அதேபோன்று கருத்தப்பிள்ளையூரில் கத்தோலிக்க கிறிஸ்தவ திருச்சபை மக்களும் மற்றும் சீர்திருத்த CSI கிறிஸ்தவத் திருச்சபை மக்களும் ஐக்கியத்தை பேணி வருவது மகிழ்ச்சியான காரியம். கத்தோலிக்க கிறிஸ்தவப் பேராயர் வருகையில் சீர்திருத்த சபையார் மாலை சால்வை அணிவித்து வரவேற்பு கொடுப்பதும் சி. எஸ். ஐ. புராட்டஸ்டண்ட் பேராயர் வருகையில் கத்தோலிக்க கிறிஸ்தவ சபையார் மாலை சால்வை அணிவித்து வரவேற்பதும் கருத்தப்பிள்ளையூர் கல்யாணிபுரம் திருச்சபை மக்களின் பரந்த உள்ளத்தை காட்டுகிறது.

மேலும் கத்தோலிக்க கிறிஸ்தவ திருச்சபை திருவிழாக்களில் சீர்திருத்த திருச்சபை மக்கள் பங்கெடுப்பதும் சீர்திருத்த CSI போதகர் அதில் அருளுரையாற்றுவதும் சீர்திருத்த CSI பண்டிகைகளில் கத்தோலிக்க கிறிஸ்தவ திருச்சபை மக்கள் பங்கெடுப்பதும் கத்தோலிக்க போதகர் அருளுரையாற்றுவதும் என தென் தமிழகத்தில் எங்கும் காணாத சபை ஐக்கியம் கருத்தப்பிள்ளையூரில் காணப்படுவது ஆண்டவருக்கு மகிமையாக உள்ளது.

## முந்நூறு ஆண்டுகளைக் கடந்து நிற்கும்

கருத்தப்பிள்ளையூர் தூய. அந்தோணியார் ஆலய திருச்சபையே இருநூற்றாண்டைத் தொட உள்ள கருத்தப்பிள்ளையூர் தூய. தோமா ஆலய திருச்சபையே மற்றும் கல்யாணிபுரம் தூய. திரித்துவ ஆலய திருச்சபையே உங்களை நேசிக்கிறவர்கள் சுகித்திருப்பார்களாக.


கிறிஸ்தவ
வரலாற்றுச் சுவடுகள்

மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |


வங்கி விபரம்

Name: Christian Historical Society
A/c Number : 1748 020000 4906
Bank name : Federal Bank
IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள்
தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த
91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
'கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'
( Christian Historical Society )
என்ற பெயரில் எடுக்கவும்

ஆசிரியர்
கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001

christianhistoricalsociety.in
tchsportal.co.in
christianhistorical@gmail.com



# சேலம் ஏற்காட்டில் கிறிஸ்தவம்–
# பல்வேறு கிறிஸ்தவ மிஷன் இயக்கங்களின் பணிகள்

ஜே.பர்னபாஸ்
சேலம் வரலாற்றுச் சங்கம்

## ஏற்காட்டில் கிறிஸ்தவம் :

கி. பி. 1820 ஆம் ஆண்டிற்கு பின்னர் காப்பி, ஐரோப்பிய காய்கறிகள், பழங்கள் ஆகியவைகளைப் பயிரிடும் பெருந்தோட்டங்களை (Estates) உருவாக்க அன்றைய ஆங்கிலேய அரசாங்கம் ஐரோப்பிய பெரும் முதலாளிகளுக்கு அழைப்பு விடுத்தது. இதனை ஏற்று ஐரோப்பியர்கள், குறிப்பாக பிரெஞ்சுக்காரர்கள், பெருந்தோட்டத்திற்கான நிலங்களை ஏற்காட்டில் வாங்கினர். இந்த ஐரோப்பியர்கள், மற்றும் பிரெஞ்சுக்காரர்கள் ஆகிய இவர்களுக்கு உதவியாக வேலைகள் செய்ய தமிழ் கிறிஸ்தவ தொழிலாளர்கள், என ஒரு சிறிய கிறிஸ்தவ சமுதாயம் அங்கே ஏற்காட்டில் உருவானது. இவர்களில் பெரும்பான்மையினர் ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள். ஏற்காட்டில் முதன்முதலாக உருவான பெருந்தோட்டம் கிரேஞ்சி எஸ்டேட் (Grange Estate -1825) ஆகும். அப்பொழுது முதன்முதலாக நாகலூரில் ஆங்கிலேயர் திரு. ஷார்ட் துரையின் தோட்டத்தில் ஒரு சிற்றாலயம் (Chapel) கட்டப்பட்டது. புதிதாக மனந்திரும்பி கிறிஸ்தவம் தழுவிய ஏற்காடு மலையில் குடியிருக்கும் மலையாளிகளுக்காக ஒரு சிற்றாலயம் அந்தியூரிலும் கட்டப்பட்டது. பால்மாடீஸ் (Balmadies Estate) என்ற இடத்தில் (பாம்புக்கல் எஸ்டேட் அல்லது பாம்புக்கல் சோலை) ஒரு சிற்றாலயத்தை புதுச்சேரி ரோமன் கத்தோலிக்க மிஷன் கட்டியது. ஐரோப்பியர்களின் வேலைக்காரர்கள், பட்லர்கள், குதிரை பராமரிப்பவர்கள், ஆயர்மார்கள், தச்சர்கள், கட்டிடவேலையாட்கள், மற்றும் கூலித் தொழிலாளர்கள், என்று ஒரு கூட்டம் ஏற்காடு மலையில் வளர்ந்தது. இவர்களில் பெரும்பான்மையினர் ரோமன் கத்தோலிக்க தமிழ் கிறிஸ்தவர்கள். சில இடங்களில் இவர்கள் தங்கள் சொந்த செலவில் ஜெப ஆலயங்களைக் கட்டி தொழுகை நடத்திவந்தனர். இவர்களைச் சந்திக்க அவ்வப்போது வரும் ஐரோப்பிய குருமார்கள் தோட்ட உரிமையாளர்களான துரைமார்களின் பங்களாக்களில் தங்கி இவர்கள் மத்தியில் ஊழியம் செய்துவந்தனர்.

## ஏற்காட்டில் தோன்றிய முதல் கிறிஸ்தவக் குடியிருப்பு

ஏற்காடு கோவில்மேட்டில் 1845ல் ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் கட்டி தொழுகை நடத்திவந்த சிறிய ஜெப ஆலயத்தை ரோமன் கத்தோலிக்க மிஷன் சுவாமியார் சங்கை மகிமைநாதர் விலைக்கு வாங்கினார், அதனைத் தொடர்ந்து சுற்றியிருந்த நிலங்களும் மிஷனுக்காக கொடுக்கப்பட்டது. இந்த பகுதியில் இந்த நிலத்தின் ஒரு பகுதியை ஜெப ஆலயம் இருந்த இடத்தை கோவில் கட்டுவதற்காக வைத்துவிட்டு, மற்ற பகுதியை கிறிஸ்தவர்கள் வீடுகட்டிக்கொண்டு வாழ்ந்து வருவதற்காக சுவாமியார் கொடுத்தார். சபை விசாரணைகளுக்கும், சந்திப்புகளுக்கும் வரும் போதக குருமார்கள் தங்குவதற்கு மூன்று அறைகள் கொண்ட ஒரு வீட்டையும் சுவாமியார் இங்கே கட்டினார் (இந்த வீடு பிற்காலத்தில் விரிவாக்கம் செய்து கட்டப்பட்டது.) பொது கிணறு, கிறிஸ்தவர்கள் தங்கிவாழ தனித்தனி வீடுகள், என்று ஒரு மாடல் கிறிஸ்தவ கிராமம் (A Model Christian Village) இங்கே முதன்முதலாக உருவானது. அருகிலேயே உருவானது அந்த ரோமன் கத்தோலிக்க கல்லறைத் தோட்டம்.

## ஏற்காட்டில் சீர்திருத்த கிறிஸ்தவம் – லண்டன் மிஷன்

ஏற்காட்டில் குடியேறிய முதல் ஐரோப்பியர் சங்கை J. M. லெக்லர் ஐயர் (Rev. J. M. Lechler, L. M. S. ) தான். அவர் கட்டிய முதல் ஐரோப்பிய பாணியிலான வீடு 'மெல்ரோஸ்' (Mel-

rose Cottage) என்பதே. இது சூரிய வெப்பத்தால் காய்ந்து உலர்ந்த செங்கற்களால் (Sun-baked Bricks) முதன்முதலாக கட்டப்பட்டது. 1847ல் ஏற்காட்டில் 5 ஏக்கரில் ஒரு காப்பித் தோட்டத்தை உருவாக்கி பெரும் தோட்ட அதிபர்களில் ஒருவராக ஐயர் அப்பொழுது விளங்கினார். மாதம் ஒருமுறை தனது தோட்டப் பணிகளை மேற்பார்வை செய்ய ஏற்காடு வரும் ஐயர் ஞாயிற்றுக் கிழமைகளில் அங்குள்ள ஐரோப்பியர்களுக்கும், ஆங்கிலோ-இந்தியர்களுக்கும் தேவாராதனைகளை நடத்துவது வழக்கம். அப்பொழுது வேலை நிமித்தமாக சேலம் பகுதிகளிலிருந்து ஏற்காடு வரும் தமிழ் தொழிலாளர்களுக்கும் தனியாக தமிழில் தேவாராதனைகளையும் அவர் நடத்தி வந்தார்.

## அருளப்பன் என்ற தச்சன்

1849 ஆம் ஆண்டு சேலம் தொழிற் பயிற்சிப் பயிலகத்தில் (Salem Industrial School) தச்சுவேலைப் பிரிவில் தேர்ச்சிப் பெற்ற திரு. அருளப்பன் என்பவரை சங்கை லெக்லர் ஐயர் ஏற்காடு பகுதிக்கு நற்செய்திப் பணியாளராக அனுப்பி வைத்தார். இப்படி அனுப்பப்பட்ட அருளப்பன் என்பவர் அங்கு தச்சு வேலை செய்து உழைத்து அதன் மூலமாக பிழைத்துக் கொண்டு நற்செய்தி அறிவிப்பு பணிகளையும் அதே வேளையில் செய்யவேண்டும் என்பதே அவரது பணி. ( To live by the work of his own hands, and carry on the evangelistic work at the same time) இவ்வாறு ஏற்காட்டில் உழைத்துப் பிழைத்து அதே நேரத்தில் கிடைத்த ஓய்வு நேரங்களில் ஏற்காட்டில் உள்ள தமிழ் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் மத்தியில் சுவிசேஷ ஊழியம் செய்துவந்தார் அவர்.

## ஆங்கிலேயத் திருச்சபையும் தூய திரித்துவ ஆலயமும்

19 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் சேலத்தில் வாழ்ந்த ஐரோப்பியர்கள் மற்றும் ஆங்கிலேயர்கள் சேலம் நகருக்கு அருகில் அமைந்திருந்த ஏற்காடு மலைப்பகுதி ஐரோப்பியர் குடியிருப்பிற்கு ஏற்றதாக இருப்பதை அறிந்து, அங்கே வீடுகளையும் (Cottages), பங்களாக்களையும் (Bungalows) கட்டி, காப்பி மற்றும் பழத்தோட்டங்களை (Estates) அமைத்துக் கொண்டு குடியேறினார்கள். அப்படி குடியேறிய ஆங்கிலேயர்கள் ஏற்காட்டில் தாங்கள் தொழுது கொள்வதற்கு ஒரு ஆலயத்தை கட்ட தீர்மானித்தார்கள். 1846 ஆம் ஆண்டு தொடங்கி 1852 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் சேலம் பகுதிகளில் அரசு நிர்வாகப் பணிகளில் இருந்த ஆங்கிலேய அதிகாரிகள் திரு. J. G. S. புரூயர் (Mr. J. G. S. Bruere), திரு. ஹேட்லி ஃப்ரீயர் (Mr. Hatley Frere), திரு. W. E. லோக்ஹார்ட் (Mr. W. E. Lockhart), திரு. F. N. மால்ட்பி (Mr. F. N. Maltby) , திரு. H. D. பிலிப்ஸ் (Mr. H. D. Philips), திரு. R. R. காட்டன் (Mr. R. R. Cotton), ஆகியோர் ஏற்காட்டில் ஆலயம் கட்ட நன்கொடை வசூலித்து, திட்ட மிட்ட தொகைக்கான பாதி அளவான தொகை தங்கள் கைகளில் இருக்க, மீதம் தொகையை ஆங்கில அரசிடம் கேட்டனர். ஆனால் ஆங்கில அரசு ஏற்காடு ஒரு மாவட்ட தலைநகராக இல்லாததாலும், அங்கு ஆங்கில பெரும்படை நிலைகொண்டு இல்லாததாலும், பெரும் தோட்ட அதிபர்களின் தோட்டங்கள் குடியிருப்புகள் மிகுந்திருப்பதாலும், சட்டப்படி உதவிசெய்ய முடியாது என்று கைவிரித்துவிட்டது. இந்த நிலையில் மனம் தளராத அதிகாரிகள் சேலம் மற்றும் ஏற்காடு பகுதிளில் வாழும் ஆங்கிலேயர்கள் மற்றும் ஐரோப்பியர்களிடம் நன்கொடை வசூலித்தனர். ஆங்கிலேயர்கள் தங்கள் தாராளமான நன்கொடைகளால் ஆலய கட்டுமானப் பணிகளை தாங்கினர். அதனால், ஆலய கட்டுமான பணிகளும், அதன் தொடர்பான அனைத்து பணிகளும் சிறப்பாக நிறைவேறியது. ஆலயப் பணிகளை முன்நின்று நிறைவேற்றி வந்த சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. W. E. லோக்ஹார்ட் (பதவிக் காலம் 1845-1850) திடீரென மரித்துப் போனதால், அவருக்கு அடுத்ததாக பொறுப்பேற்ற திரு. F. N. மால்ட்பி 1850 ல் பணிகளை ஒருங்கிணைத்து நடத்தினார். இந்த ஆலய கட்டுமானப் பணிகளுக்கு உதவியவர்கள், முன்நின்று காரியங்களை நடப்பித்தவர்களில் பெரும்பான்மையினர் ஆங்கிலேய அரசாங்கத்தின் நிர்வாகப்பணிகளில் இருந்த Madras Civil Service அதிகாரிகள்.

ஆலயம் கட்டுவதற்கான இடம் அன்றைய ஆங்கிலேய தலைமை மருத்துவர் ஸ்காட் (Surgeon Major Scott) என்பவருக்கு சொந்தமான இடம் அதை அவர் தானமாகக் கொடுத்தார். இந்த ஆலயம் கட்டுவதற்கு நிதி உதவி அளித்தவர்களில் ஒரு சிலரை மாத்திரம் இங்கு நான் வரலாற்றிற்காக பதிவிடுகிறேன். வரலாற்று ஆசிரியர் திரு. J. W. B. டைக்ஸ் (Mr. J. W. B. Dykes), சேலம் ஜமீன்தார் ஜார்ஜ் பிரெட்ரிக் பிஸ்சர் (Mr. George Frederick Fischer) புகழ் பெற்ற சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. H. A. பிரெட்ஸ் (H. A. Brett, -period of service -1853-1862) கி. பி. 1853 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 3ஆம் நாள் சென்னை மாகாண பேராயர் தாமஸ் டெல்ட்ரி (Rt. Rev. Thomas Dealtry- Bishop of Madras) அவர்களால் ஆலயம் மங்கலப்படைப்பு செய்யப்பட்டு திறக்கப்பட்டது.

## தூய திரித்துவ ஆலயத்தில் காணப்படும் நினைவுச் சின்னங்கள்

1934 ஆம் ஆண்டு இந்த ஆலயம் ஆங்கிலேய திருச்சபையாரின் நன்கொடைகளைக் கொண்டு பழுதுபார்க்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது. (Restored in 1934 by the contributions from the congregation). இந்த ஆலயத்தின் கட்டுமானப் பணிகளுக்காக ஈடுபாட்டுடன் உழைத்த சேலம் மாவட்ட கலெக்டர் திரு. W. E. லோக்ஹார்ட் நினைவிற்கு ஒரு அழகிய பளிங்கு நினைவுச் சின்னம் ஆலய உட்புறச் சுவற்றில் பதிக்கப்பட்டுள்ளது.

இதேபோல 10-6-1848ல் சேலத்தில் மரித்த டன்கன் கேடன்ஹெட் எஸ்கோயர்(Duncan Cadenhead Esquire), கல்வியாளரும், கெய்சர் ஐ ஹிந்த் விருது பதக்கம் பெற்றவருமான திரு. எட்வின் வின்க்லர் (Mr. Edward Winckler, B. A. , F. M. U. , Kaiser -i-Hind medalist, veteran educationalist of south India-1849-1929), ஆங்கில நாவலாசிரியரான திரு. சார்லல் டிக்கின்ஸ் என்பவரின் முன்னோர்களும், உறவின் முறையினரும் இங்கே ஏற்காட்டில் பெருந்தோட்டங்களையும், பங்களாக்களையும், உடையவர்களாக இருந்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவரான திரு. சார்லஸ் சீபோர்த் டிக்கின்ஸ் (Mr. Charles Seaforth Dick-

ins -died 28-4-1925), மேலும் டிக்கின்ஸ் குடும்பத்தின் மூத்த முன்னோடியான திரு. ஆல்பிரெட் ஸ்டார்க் டிக்கின்ஸ் (Mr. Alfred E. A. Starke Dickins -died at Bangalore 7-7-1898)

இந்த டிக்கின்ஸ் குடும்பத்தின் வழித்தோன்றலான திருமதி. அன்னா பேட்ரீசியா டிக்கின்ஸ் (Mrs. Anna Patricia Dickins) கடந்த 2005 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் தனது முன்னோர்களின் அடிச்சுவடிகளைத் தேடி ஏற்காடு வந்து, முன்னோர்களின் கல்லறைகளில் அஞ்சலி செலுத்தி அவர்களைக் குறித்த தகவல்களைச் சேகரித்தார். இவைகளை ஒரு புத்தகமாக வெளியிட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (The New Indian Express -5-3-2005). சேலம் இலக்கிய கழகத்தின் (Salem Literary Society) ஸ்தாபகரான திரு. ஜேம்ஸ் பிஸ்சர் (Mr. James Fischer-1832-73) என்பவரின் மனைவி திருமதி. லீலா பிஸ்சர் (Leila Fischer) , லூயீஸ் பிளன்கின்சாப் எஸ்கோயர் (Louis Blenkinsop Esquire- Engineer, P. W. D. died 23-10-1861-buried at Harur), இந்திய தொழிற்கல்வியின் தந்தை சங்கை J. M. லெக்லர் ஐயரின் மூத்த மகனும், ஏற்காடு பெருந்தோட்ட அதிபருமான திரு. வி. இ. லெக்லர் துரை மற்றும் அவரது துணைவியார்(Mr. W. I. Lechler and his wife Mrs. Kate Eliza Lechler) ஆகியோரின் நினைவுச் சின்னங்களும், முதலாம் உலகப் போரின் போர்க்களங்களில் தங்களது இன்னுயிரை ஈந்த ஏற்காடு வீரர்கள் நினைவான வெண்கல பட்டயங்களும் ஆலய உட்புற சுவர்களை அலங்கரிக்கின்றன. இவைகள் கடந்தகால வரலாற்றின் சாட்சிகளாக இன்றும் பேசுகின்றன.

## ஆங்கிலேயர்களின் மலைக் கல்லறைத் தோட்டம் :



தூய திருத்துவ ஆலயத்தின் முன்பாக வலது இடது பக்கங்களிலும், ஆலயத்தின் பக்கங்களிலும், பின்பாகவும் இருந்த மலைச் சரிவுகள் சமப்படுத்தப்பட்டு அங்கெல்லாம் கல்லறைகள் அமைக்கப்பட்டன. இப்படியாக இந்த ஆங்கிலேயர்களின் மலைக் கல்லறைத் உருவானது. ஆலயமும் மற்றும் இந்த கல்லறைத்தோட்டமும் புகழ் பெற்ற மான்போர்ட் பள்ளிக்கு எதிராகவும், ஏற்காடு நூலகத்திற்கு அருகிலும் உள்ளது. இன்று வரலாற்றின் சுவடுகளாக உள்ள புகழ்பெற்ற மனிதர்களின் கல்லறைகள் சேலம் வரலாற்றை அறிவிக்கும் ஆவணங்களாக உள்ளன.

## இந்த கல்லறைத் தோட்டத்தில் உள்ள வரலாற்றுக் கல்லறைகள்

1. நார்மன் மோரிஸன் எஸ்கோயர் (Norman Morrison Esquire -died 23-6-1855-49 years),
2. ஹாவார்ட் பார்த் லெக்லர், பத்து வயது பையன். (சங்கை லெக்லர் ஐயரின் கடைசி மகனாக இருக்கலாம்-Howard Barth Lechler died at yercaud 29-6-1866 age 10 years ),
3. சேலம் லண்டன் மிஷன் திருத்தொண்டர் சங்கை W. E. மாரிஸ் அவர்களின் மகள் ஈடித் மே வின் கல்லறை (Edith May infant daughter of Rev. W. E. Morris of salem died 9-4-1868),
4. சேலம் மாவட்ட பிரிட்டீஷ் நீதிபதி C. F. சாமியர் எஸ்கோயர் (Civil &Sessions Judge of Salem C. F. Chamier Esquire , died 20-4-1869),
5. கேப்டன் E. H. ஷார்ட் (Captain E. H. Short-1807-1883),
6. தலைமை மருத்துவர் ஜான் ஷார்ட் -ஆங்கிலோ -இந்தியரான இவர் பிரிட்டிஷ் மெட்ராஸ் இராணுவ படையில் தலைமை மருத்துவர். (Deputy Surgeon-General John Shortt died 24-4-1889) இவர் நினைவாகத்தான் (Shortt Memorial Parish Hall) ஆலய சமுதாயகூடம் பெயரிடப்பட்டது.
7. சங்கை J. M. லெக்லர் ஐயரின் மனைவி திருமதி. ரோசா அன்னி லெக்லர் அம்மையாரின் கல்லறை (Mrs. Rosa Anne Lechler widow of Rev. J. M. Lechler of Salem entered into rest 25-3-1896, aged 78 years),
8. சங்கை பிட்டர் பெர்சிவெல் ஐயர் (1803-1882) கல்லறை. பைபிளை தமிழில் மொழிபெயர்த்த தமிழறிஞர். (Rev. Peter Percival),
9. சங்கை லெக்லர் ஐயரின் மகளும், சங்கை G. O. நியூபோர்ட் ஐயரின் மனைவியுமான திருமதி. ரோசா மேட்செல் கல்லறை (Rosa Machell, died 5-9-1909),
10. இந்திய தொல்லியலின் தந்தை இராபர்ட் புரூஸ் பூட் கல்லறை (Robert Bruce Foote - late superintendent Geological Survey of India (1834-1912),
11. பொறியாளர் கார்ல் இராம் (1821-1912) கல்லறை. இவர் சங்கை லெக்லர் ஐயரின் சேலம் தொழிற்பயிற்சிப் பயிலகத்தின் பொறியாளர். பிற்காலத்தில் ஏற்காட்டில் பெருந்தோட்ட உரிமையாளராக, Shevaroy Planters Association ஸ்தாபகர்களில் ஒருவராக விளங்கினார்.
12. இவர்களைத் தொடர்ந்து முதலாம் உலகப்போரில் ஆங்கிலேயர்களால் கைதிகளாக பிடிக்கப்பட்டு ஏற்காட்டில் ஈச்சங்காடு பகுதியில் சிறை வைக்கப்பட்டிருந்த ஜெர்மன் கைதிகளில் (P. O. W.) சிலர் நோய்வாய்ப்பட்டு இறந்தபோது அவர்களும் இங்கே அடக்கம் செய்யப்பட்டனர்.

## லண்டன் மிஷனும் CSI தமிழ் ஆலயமும் :

1854 ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்களிடம் வேலைசெய்யும் தொழிலாளர்கள், வேலைக்காரர்கள், மற்றும் இவர்களின் குடும்பத்தினர் ஆகியவர்களுக்கு ஒரு சீர்திருத்த கிறிஸ்தவ தமிழ் திருச்சபை ஏற்காட்டில் உருவானது. சங்கை

லெக்லர் ஐயரின் மரணத்திற்குப் பின்னர் அவரது துணைவியார் திருமதி. ரோசா அன்னி லெக்லர் அம்மையார் தமிழ் தொழிலாளர்கள் மத்தியிலான ஊழியத்தை பராமரித்து வந்தார். அம்மையாரின் வீட்டில்தான் ஆரம்பத்தில் லண்டன் மிஷன் தமிழ் சீர்திருத்த கிறிஸ்தவர்களுக்கான ஞாயிறு ஆராதனைகள் நடந்தது. திருமதி. லெக்லர் அம்மையாரின் மருமகனான சங்கை டாக்டர் மோரிஸ் பிலிப்ஸ் ஐயரின் (Rev. Dr. Maurice Philips, L. M. S. ) முயற்சியால் ஏற்காடு டவுன் மையப் பகுதியில் (பஸ் நிலையம் எதிரில்) 3 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு அங்கு 1872 ல் தமிழ் ஆலயம் கட்டப்பட்டது. இந்த ஆலயத்திற்கு திரு. W. E. கில்பார்ட் (Mr. W. E. Gilbert) என்பவர் முன்மண்டபமும் மணிகோபுரமும் 1884 ஆம் ஆண்டின் கிறிஸ்துமஸ் பரிசாக கட்டித்தந்தார். எனது தாத்தாவின் அப்பா திரு. மனாசே என்பவரும், அவரது மூத்த மகன் திரு. தேவாசீர்வாதம் அவர்களின் குடும்பத்தாரும், எனது பெரியப்பா திரு. I. சாமுவேல் தேவராஜ் மற்றும் பெரியம்மா திருமதி. S. ரோசலின்ட் சாமுவேல் மற்றும் அவர்களின் குடும்பத்தினரும் இந்த தமிழ் ஆலயத்தில் வழிபட்டுவந்தனர். தற்பொழுது புதிய ஆலயம் CSI சீலோ மில்லேனியம் ஆலயம் பழைய தமிழ் ஆலயம் எதிரிலே 1999 ஆம் ஆண்டுமுதல் செயல்பட்டு வருகிறது.

## இவாஞ்சலிக்கல் லுத்தரன் மிஷனும் லுத்தர் பேட்டை சத்திய வாசகர் கோயிலும்:




இவாஞ்சலிக்கல் லுத்தரன் திருச்சபை உதவியுடன் ஏற்காட்டில் சிறப்பான ஊழியத்தை திரு. ஹெர்ரே (Mr. Herre) மேற்கொண்டார். லுத்தரன் கிறிஸ்தவர்கள் அதிகம் வாழும் லுத்தர்பேட்டை என்ற குடியிருப்பு உருவானது. அங்கே சத்திய வாசகர் கோயில் என்ற ஆலயம் 1876ல் உருவானது. அதன் அருகே ஒரு கல்லறைத் தோட்டமும் (Lutheran Mission Cemetery) உருவானது.

## டேனீஸ் மிஷன் தாபோர் மலை அசம்பூர் ஆலயம்:

1881 ஆம் ஆண்டு டேனீஸ் மிஷன் ஏற்காட்டில் மிஷன் பணிகளைத் துவக்கினர். 1883 ல் ஏற்காடு வந்த சங்கை. C. கோபெட் கிரிகர்சென் ஐயர் (Rev. C. Kofoed Gregersen, D. M. S.) ஏற்காட்டில் தாபோர் மலைப் பகுதியில் அசம்பூர் ஆலயத்தை 1892 ஆம் ஆண்டு கட்டினார். 1893ல் சங்கை ஆன்டர்சென் ஐயரும் (Rev. Andersen, D. M. S. -period of service -1893-1901), அவருக்குப் பின் சங்கை வில்லார்ட்ஸ் ஹேன்சென் ஐயரும் (Rev. Villards Hansen, D. M. S. -period of service - 1901-1946) டேனீஸ் மிஷன் பணிகளை இந்தப் பகுதிகளிலும் கீழே டேனீஸ் பேட்டைப் பகுதிகளிலும் மேற்கொண்டு வந்தனர். இவர்களுக்கெல்லாம் முன்னோடியாக சங்கை ஆக்ஸ் ஐயர் (Rev. C. Ochs) சேலம் மற்றும் ஏற்காடு பகுதிகளில் ஊழியம் செய்திருக்கிறார். அப்பொழுது அவரது 3 வயது மகன் ஹேன்ரிச் ஜார்ஜ் 3-2-1853ல் சேலத்தில் மரித்துப்போனான். சேலம் பழைய ஆங்கிலேயர் கல்லறைத் தோட்டத்தில் அவனது கல்லறை ஐயரின் தியாகத்திற்கு சாட்சி.

## ஜெர்மன் போர்கைதிகள் கட்டிய மணிகோபுரம் :



முதலாம் உலகப்போரில் கைதிகளாகப் பிடிக்கப்பட்ட ஜெர்மானியர்களை ஆங்கிலேய அரசு ஏற்காட்டில் ஈச்சங்காடு பகுதியில் (Eachancaud Barracks) சிறை வைத்தனர். அசம்பூர் ஆலயத்தில் ஆராதனைகளில் பங்கேற்ற இந்த போர் கைதிகள் இந்த ஆலயத்திற்கு ஒரு மணிகோபுரத்தைக் கட்டித்தந்தனர். ஜெர்மன் நாட்டு பாணியில் கட்டப்பட்ட இந்த மணிகோபுரம் அவர்களின் சிறை வாழ்க்கையின் சாட்சியாக நிற்கிறது.

## ஏற்காடு ஹேன்செனூர்:



சங்கை வில்லார்ட்ஸ் ஹேன்சென் ஐயர் ஏற்காடு மலையில் குடியிருக்கும் மலையாளி மக்கள் மத்தியில் சிறப்பான ஊழியத்தை செய்துமுடித்த 25 ஆவது ஆண்டுவிழாவில் அவர் இந்தப் பகுதியில் உருவாக்கிய கிறிஸ்தவ குடியிருப்பிற்கு ஹேன்செனூர் (Hansenur) என்று அவரது சேவைகளின் நினைவாகப் பெயரிடப்பட்டது. மலைவாழ் மக்களுக்காக 45ஆண்டுகள் தன்னலமற்ற ஊழியத்தை செய்துவந்த ஹேன்சென் தம்பதியர் தாங்கள் தங்கள் தாய்நாடு திரும்பிச் செல்லும் வேளையில் இவர்களது திருப்பணிகளை யாரும் மறந்துவிடக்கூடாது என்று நினைத்த இவர்களது பிள்ளைகள் ஆலயம் அருகே உள்ள மலைப் பாறையில் இவர்கள் பெற்றோர்கள் இந்த பகுதியில் செய்த சேவைகளின் நினைவான ஒரு கல்வெட்டை செதுக்கி வைத்தனர். இந்த வினோத கல்வெட்டு ஒரு சரித்திரச் சான்று ஆகும்.

ஏற்காடு சத்தியவாசகர் கோயிலும், அசம்பூர் ஆலயமும் தற்பொழுது ஆற்காடு லுத்தரன் திருச்சபையாரால் நடத்தப்பட்டுவருகிறது.




*"Remember the days of old; consider the years of many generations; ask your father, and he will show you, your elders, and they will tell you"*

*(Deut. 32:7 ESVA).*

*We, the People of God are exhorted to keep alive the memory of our faith history and pass it on to our sons and daughters. The Christian Historical Society endeavours to help Tamil-Christian community to fulfill this noble obligation.*

***All praise and glory be to God!***

***Shalom Greetings to you in the name of our Lord and Saviour Jesus Christ!***

*The Christian Historical Society (=CHS) is the fruit of the diligent efforts of numerous Tamil-Christian historians who in the light of Deuteronomy 32:7 seek to document as well as write the faith history of Tamil-Christian community with the active involvement of numerous young volunteers. To cover wider areas where our community has its roots, collaborations are underway with historians and like-minded individuals throughout Tamil Nadu.*

*By God's grace and with prayerful support of Friends, CHS has initiated several activities towards realising its objectives during the past five years since inception. The important ones being:*

- *Publication of the monthly magazine, Kristhava Varalaatru Suvadugal*
- *Reprinting books which contain historical accounts of Tamil-Christian community*
- *Compilation and digitalising of antiquarian texts and documents*
- *Organising Mission Tours to places of historical importance*
- *Establishment of a Library with space for Museum, Research, Seminars etc.*

*Currently, with the benevolent donation of land by a Friend, God has enabled CHS to start the building project for Library cum Research & Development Centre at Surandai. Few individuals are donating and have promised to donate portion of construction material. We need to buy remaining construction material and furnishings for the Library and Seminar Hall.*

*We cordially invite families, individuals and organisations to contribute generously to complete the momentous library building, God willing by June 2024.*

*In God's mission,*

*Manna Selvakumar*

*+91 9176780001*




# புரட்சிப்புயல் ஏமிகார்மைக்கேல்

முனைவர்-ஜான்சி பால்ராஜ்
நாவலாசிரியர், திருநெல்வேலி
+91 73971 56808

வரலாற்று நாவல் – நெடுந்தொடர் –24

'அம்மா, புலியூர்குறிச்சியிலிருந்து வேல்முருகன் அண்ணாச்சி வந்திருக்காங்க, உங்களை பாக்குறதுக்காக' என்றாள் சத்யா.

**'உள்ள வர சொல்லுமா'** என்ற ஏமி, சன்னல் வழியே எட்டிப் பார்த்தார். அவர் சற்றுத் தயங்கியபடி வெளிப்புற சுவற்றில் சாய்ந்தபடி நின்று கொண்டிருந்தார். முகத்தில் ஏதோ குழப்பம் தெரிந்தது. 'உள்ள வாங்க அண்ணாச்சி. ஏன் வெளியேவே நிக்கிறீங்க. ? வாங்க, வந்து இங்க.. இதுல உட்காருங்க' என்று ஏமியின் வரவேற்பு அவரை அமைதலாக்கியது.

'தாயி. . . அதுமா. . . நான் உன்கிட்ட ஒன்னு சொல்லணும்' என்றவர் வெளியிலேயே நின்றிருந்தார். 'சொல்லுங்க அண்ணாச்சி' என்றபடியே அங்கிருந்த சிமெண்ட் இருக்கையில் அமரும் படி கூற, அவர் அதன் ஒரு ஓரத்தில் நின்று கொண்டு…

'அதாவதுமா.. இன்னைக்கு கெழக்கு வெளுக்குமுன்னே, நம்ம ஊர் பஸ் ஸ்டாப்புக்கு பக்கத்துல நான் போயிருந்தேன். அங்க ரெண்டு பொம்பளைங்க நின்னுட்டு இருந்தாங்க. ஒருத்தி இளவயசுகாரி, இன்னொருத்திக்கு நடுத்தர வயசு இருக்கும்' என்றவர் தொடர்ந்து பேச நாவராமல், ஏமியின் முகத்தையும் பார்க்க இயலாமல், தலைக்குனிந்து நின்றார். அவரது நெற்றியில் வேதனையின் வரிகள் படர்ந்திருந்தன.

'சொல்லுங்க அண்ணாச்சி… வேறென்ன நடந்துச்சு, அவங்களுக்கு என்னாச்சு'என்று ஏமி பதட்டமானார். 'அதுலமா.. அந்த சின்ன வயசுகாரி ரொம்ப அசதியா நின்னுகிட்டு இருந்தா. அவ கால்ல இருந்து ரத்தம் பாதம் வரைக்கும் சொட்டிகிட்டே இருந்துச்சு தாயி'என்றவர் தனது தோளில் கிடந்த துணியை சேர்த்துப் பிடித்தபடி… பேச முடியாமல் தடுமாறினார்.



'என்ன ரத்தமா... ?!, இப்போது அவர்கள் எங்க இருக்காங்க.. . அண்ணாச்சி?' 'நம்ம ஆஸ்பத்திரிக்கு முன்னால இருக்குற பஸ் ஸ்டாண்ட்ல தான் இருக்காவ தாயி. என்னால அவிய கிட்ட ஒன்னும் சொல்ல முடியல. ஆனா அந்தப் பெரிய பொம்பள, அவ கால்ல இருந்து ரத்தத்தை எல்லாம் அங்க நின்ன செடித்தளைகளைப் பறிச்சி, தொடச்சி தொடச்சி போட்டுகிட்டே இருந்தா… அவள் உடுத்தியிருந்த சேலை துணியெல்லாம் நனைஞ்சி இரத்த கறையா இருந்துச்சிமா… அந்தப் பொண்ணு மயக்கம் வர மாதிரி அந்த அம்மா மேலே சாய்ஞ்சி நின்னா. பார்க்க பரிதாபமா இருந்துச்சுமா. நான் நின்னதை அவிய ரெண்டுபேரும் பார்க்கல. நான் என்ன செய்யன்னு தெரியாம இங்க ஓடியாந்தேன்' என்றவர் அங்கும் இங்கு பார்த்துபடி அங்கலாய்த்தார்.

'ஐயோ அப்படியா!?.. . மரியா.. . எப்சிபா.. . அங்க வேற அக்காமார்கள் இருந்தா கூப்பிடு' என்ற ஏமி, 'ராசிமலர், கமலா இரண்டு பேரும் கீழே இறங்கி வாங்க' என்று மாடியை நோக்கி சத்தமாக அழைத்தார். 'வாங்க. . . வாங்க.. நம்ம ஊர் பஸ்

ஸ்டாண்ட் பக்கமா, யாரோ ரெண்டு பெண்கள் அழுதபடி நின்னுட்டு இருக்காங்களாம்.. .

அண்ணாச்சி, எவ்வளவு நேரமிருக்கும் நீங்க அவர்களைப் பார்த்து?' என்று கேட்டபடி, அவரோடு சேர்ந்து நடையும் ஓட்டமுமாக பேருந்து நிறுத்தத்தை நோக்கிச் சென்றனர். அது காப்பகத்திலிருந்து மேற்கே ஐந்து நிமிட நடைபயணத் தொலைவில் இருந்தது.

'இப்ப செத்த நேரத்துக்கு முன்னாடிதான் தாயி'என்றார் அவர். ஏமியின் வேகநடைக்குப் பின்னால் அங்கிருந்த அனைவரும் சேர்ந்து ஓடினர்.

சில நிமிடங்களுக்குள் சென்றடைந்தனர். அங்கு அப்போது ஒருவரும் இல்லை. ஆனால் அந்த இடத்தில் வேல்முருகன் சொன்னது போல், துடைக்கப்பட்ட இரத்தக் கறையோடான இலைகளும் கால் தடங்களும் தெரிந்தன. இந்த வழியாகத்தான் போயிருக்காங்க. வாங்க போவோம். ரொம்ப தூரத்துக்கு அவங்க போயிருக்க முடியாது' என்றார் ஏமி.

அந்த இடத்திலிருந்து கிழக்கே டோனாவூருக்குள் செல்லும் பாதையும், தெற்கே திருக்குறுங்குடி செல்லும் பாதையும், மேற்கே களக்காடு செல்லும் வழிப்பாதையும் இருந்தன.

'ஒவ்வொரு பாதைக்கும் இரண்டு இரண்டுபேராக பிரிந்து செல்லுங்கள்' என்று அவசரவசரமாகக் கைக்காட்டினார் ஏமி. அப்போது மருத்துவமனையிலிருந்து ஓடிவந்த நர்ஸ் நீலா, 'அம்மா.. . அம்மா' என்று பதட்டத்தோடு கூப்பிட்டபடியே வந்தாள். ' என்ன சொல்லு 'என்று திரும்பினார் ஏமி.

'அம்மா. . அது.. நேற்று.. . . . ராத்திரி குழந்தை பெத்த அந்த முனியம்மாவும், அவளது மதர் செல்லம்மாவும் படுக்கையில இல்லம்மா, குழந்தை மட்டும்தான் இருக்கு' என்றாள் பயமும் கவலையும் ஒருசேர.. .

'என்னது. . . ?!' என்ற ஏமிக்கு சட்டென தெளிவானது. . . அது இந்த இருவராகத் தான் இருக்க வேண்டும் என்று.. . ! 'சரி வேகமாகச் செல்லுங்கள் அது அவர்களாக தான் இருக்க முடியும். நடங்க... இரண்டு பேர் மேல்புறம் போகின்ற வழியாகச் செல்லுங்க... என்றார். தென்புறமாகச் செல்லும் வழிப்பாதையில் ஏமியும் தோழியரும் விரைந்தனர்.

'நீலா... நீ ஓடிப் போய், முதலுதவிப் பொருள்களை எடுத்துக் கொண்டு, இன்னும் சில நர்சுகளையும் உன்னோடு அழைத்துவா' என்று ஆங்கிலத்தில் கூறிய ஏமி, 'அண்ணாச்சி நீங்க நர்ஸ் நீலாவுக்கு, நடந்ததை எடுத்துச் சொல்லுங்க. அங்கேயே இருங்க. ஆண்கள் யாரும் இங்கே வர வேண்டாம். நாங்கள் போய் தேடுகிறோம்' என்று வேக வேகமாக நடந்தார் ஏமி.

ஏழெட்டு நிமிட நடைக்குப் பின்னர், அந்தப் பெண்கள் தென்புறத்து வழிப்பாதையிலிருந்து இறங்கி, சுமார் இருபதடி தொலைவில் ஒரு பனை மரத்துக்கு அடியில், மஞ்சணத்தி மரங்களின் நிழலில் அமர்ந்திருந்தனர். அந்த இளம் பெண் அவளது தாயாரின் மடியில் கைகளை மடக்கி தனது கழுத்திற்குள் வைத்து, குளிரில் நடுங்கியபடி படுத்திருப்பது தெரிந்தது.

அந்தத் தாய் தனது மகளின் தலையில் கைகளை வைத்தபடி பனையில் சாய்ந்து சோகமே உருவாக அமர்ந்திருந்தாள். இவர்கள் வருவதைப் பார்த்ததும், 'எம்மா எந்திரி, ஆஸ்பத்திரிக்காரங்க வாரவ.. . நம்மளை கண்டுபிடிச்சிட்டாவளோ...' என்று மகளை பார்த்தாள்.

'பயப்படாதீங்க.. நாங்க உங்களை ஒன்றும் செய்யப் போறது இல்ல. என்னாச்சு, ஏன் இப்படி சொல்லாம வந்துட்டீங்க. சரி, கவலைப்படாதீங்க, வாங்க, எழுந்திருங்க, போகலாம். . . 'என்று ஏமி பரிவோடு கூற, மற்ற இருவரும் அவர்களைச் சுற்றி நின்றனர்.

'இல்ல.. . நாங்க வரல, நாங்க எங்க வூட்டுக்குப் போறோம். நல்லா இருப்பிய.. எங்களைப் பத்தி வேற யார்கிட்டேயும் சொல்லிறாதீங்க. எங்க வூட்டுப் பிரச்சன பெரிய பிரச்சன. எங்களை, இவளை கட்டிகிட்டவன் கொல்லத்துக்கு காத்துகிட்டு இருக்கான். இவ என் ஒரே மகள். அதான்... பயத்துல என் மகளை கூட்டிட்டு எங்கூருக்கு போறேன்மா... நல்லா இருப்பீங்க எங்களை விட்டுருங்க' என்று கைக் கூப்பி அழுதாள்.

'நாங்க உங்கள ஒன்னுமே செய்ய மாட்டோம்மா... ரெண்டே ரெண்டு நாள் ஆஸ்பத்திரியில் இருந்துட்டு குணமடைஞ்சதும் போங்கம்மா, வாங்க' என்றார் ஏமி. 'அந்தத் தாய் தேம்பி தேம்பி அழுதாள். படுத்திருந்த பெண்ணிற்கோ அழுவதற்கு பெலன் இல்லை. கண்கள் மேல் நோக்கி சொருகி போய்க்கொண்டிருந்தது.

'அதோ பாருமா, உன் பொண்ணு செத்துக்கிட்டு இருக்கா.. . இன்னும் சற்று நேரத்தில் அவள் உயிருக்கு ஆபத்தாகவும் அமையலாம். வாங்கமா, எழுந்திருங்க, நாம போய் ஹாஸ்பிடல்ல வச்சு அவளைக் கவனித்து, உடல்நிலை சரியான உடனே உங்களை விட்டுவிடுகிறோம்.. . ' என்று நர்ஸ் மீனா பதட்டத்தோடு சொன்னாள். உயிருக்கு ஆபத்து என்றதும் அந்தத் தாய் பதறினாள். 'சரி சரி' என்று எழுந்தாள்.. . அழுதுகொண்டே. !

உடனே அந்தப் பெண்ணின் தலையோடு தோளையும் சேர்த்து நர்சு மீனாவும், கால்களை ஏமியும் பிடித்துத் தூக்கினர். சில நிமிடங்களில் மருத்துவக்குழுவும் அங்கு வந்துசேர, பாதுகாப்பு வண்டியில் வைத்து வேகவேகமாகக் கொண்டு செல்லப்பட்டாள். அதுவரை அழுதுகொண்டே இருந்த அந்தத் தாயும் நடைத் தளர்ந்து கீழே விழுந்தாள்.

இருவருக்கும் இரவு வரை மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. சில மணிநேரத்தில் செல்லம்மாள் கண்விழித்தாள். இரவில்.. . ஏமி மட்டும் அந்த அறையில் அவர்களோடு இருந்தார். ஏமி எதுவும் கேட்கவில்லை. முனியம்மாள் லேசாகத் தெளிவடைந்து கண்களைத் திறந்து அங்கும் இங்கு பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் படுத்திருந்த கட்டிலைச் சுற்றி ஏமியும் செல்லம்மாளும் நின்று கொண்டிருந்தார்கள். மற்றவர்களை வெளியே செல்லும்படி கூறினார் ஏமி.

'சரிமா, கவலைப்படாதீங்க. என்ன ஆச்சு, ஏன் எதுக்குன்னு நீங்க என்னிடம் சொல்ல விரும்பினால் சொல்லுங்க.. என்று மெதுவாக அந்த பெண்ணின் தலையைத் தடவிய படியே கூறினார் ஏமி.

'அம்மா இவள் கணவன் ஒரு குடிகாரன். என் மவளை, 15 வயசுலயே கல்யாணம் முடிச்சு குடுத்துட்டேன். இது இவளுக்கு மூணாவது பிரசவம். முதல் ரெண்டும் பொட்ட பிள்ளைங்க. இந்தப் பிள்ளையும் பொட்ட புள்ளையா பொறந்தா, வூட்டுக்கு வராதன்னு இவள் புருசன் சொல்லிட்டான். அது மட்டும் இல்லம்மா, இனி பொட்ட புள்ளையா பிறந்தா, அந்த பிள்ளை எனக்கு பிறந்தது இல்ல. நான் நாலு ஆம்பள புள்ளையோட பெறந்தவன். உனக்கு ஏன் பொட்ட புள்ளையா பிறக்குது ? வயித்தில இருக்கிற இந்தப் புள்ள ஆம்பிளப் புள்ளையா பிறந்தா தான், அது எனக்கு பெறந்தது. பொட்ட புள்ளையா பொறந்தா அது எனக்கு பெறக்கல... வேற எவனுக்கோ பிறந்ததா இருக்குமுன்னு... சொல்லி சொல்லி இவளை மடத்தனமா அடிச்சு நொறுக்குனாம்மா. பாருங்கம்மா... இதுவும் பொட்ட புள்ளையா போச்சு. நான் வேண்டாத கடவுள் இல்லம்மா. இந்த ஒலகத்தில எத்தனை கடவுள் இருக்குதோ, அத்தனை கடவுளையும் நான் வேண்டினேன். ஒரு கடவுளும் எனக்குக் கைக் கொடுக்கலம்மா' என்று ஏங்கி ஏங்கி அழுதாள்.

'சரி நீங்க இந்த ஆஸ்பத்திரிக்கு வந்தது அவனுக்கு தெரியுமா' என்று ஏமி கேட்டார். 'ஆமா, சொல்லிட்டு தான் வந்தோம். குழந்தை ஆம்பள புள்ளையா இல்லன்னா, நீ திரும்பி வராத, அங்கேயே செத்துரு. மீறி இங்க வந்து குழந்தையை என் கண்ணில் காட்டுனா, நான் செத்துருவேன்னு சொன்னான். அவனோட தாய்க்காரியும் அதே மாதிரியே சொல்லுதாமா. எம்புள்ள வேற எந்த ஆம்பளை முகத்தையுங்கூட எட்டிப்பாக்காதும்மா. . . என்று சொல்லவும், படுத்திருந்த அந்த மகளும் தேம்பி தேம்பி அழ ஆரம்பித்தாள்.

'சரி, அழாதிங்க.. உங்களுக்கு மைலாப்பூர் தானே?, கவலையை விடுங்க. ஆம்பள பிள்ளை தானே உங்களுக்கு பிறந்திருக்கு, யார் சொன்னது உங்களுக்கு பெண் குழந்தை பிறந்தது என்று!?'என்று ஏமி கேட்கவும், அங்கு வந்த நர்சு நீலா, ஏமியை வியப்போடு ஏறிட்டுப் பார்த்தாள்.

'நீலா, நீ போய் அந்த எஸ். எப் ரூமில் இருக்குற ஆண் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வாமா' என்றார் ஏமி. 'அது வந்து மா.. . ' என்று அவள் குழப்பமாகப் பார்க்க.. .

'நீலா, நான் சொன்னதை செய். போய் தூக்கிக் கொண்டு வா'. என்றார். 'சற்று நேரத்தில் நீலா குழந்தையோடு வந்தாள். இங்கே பாருமா, இது தான் இனி உன்னுடைய குழந்தை. நான் சொல்வதை நீங்க கேட்டீர்கள் என்றால், கண்டிப்பா உங்கள் வாழ்க்கை நல்லா இருக்கும்' என்ற ஏமி அவர்கள் இருவரையும் அன்பொழுகப் பார்த்தார்.

அந்தக் குழந்தையை நீலாவிடமிருந்து வாங்கி, படுத்திருந்த முனியம்மாளின் பக்கத்தில் சென்று காட்டினார் ஏமி. பிறகு செல்லம்மாவிடம் திரும்பி காட்டினார். இருவருமே எந்தவித உணர்ச்சியும் காட்டாமல் குழந்தையை எட்டிப்பார்த்துக் கொண்டனர். 'இது.. . . இது எங்க குழந்தை இல்லையம்மா' என்ற செல்லம்மாள் ஏமியையும், தனது மகளையும் மாறி மாறி பார்த்தாள்.

'ஆமா. ஆனா இனி இது உங்க குழந்தையாக நீங்க ஏத்துக்கிட்டீங்கன்னா. உங்க பெண்ணோட வாழ்க்கை ஆனந்தமா இருக்கும்மா. உங்க நன்மைக்காக தான் சொல்றேன். ஆனா நீங்க விரும்பினால் தான். விரும்பவில்லையென்றால் வேண்டாம். இவளுக்கு இரத்தப்போக்கு நின்றதும் நீங்க உங்க பெண்ணை அழைச்சிட்டு போகலாம். உங்க குழந்தையை நான் என் குழந்தையைப் போல பாத்துக்குறேன். அதைப்பற்றி கவலையே படாதீங்க. ' என்றவாறு அந்த குழந்தையை முனியம்மாள் படுத்திருந்த படுக்கையின் அருகில் கிடத்தினார்.

'எனக்கு ஒன்னுமே புரியல மா' என்றாள் செல்லம்மாள். அதே நேரம் முனியம்மாளின் கை, குழந்தையின் தலையை வருடுவதை ஏமி கவனித்தார். அவள் மேலே விட்டத்தைப் பார்த்தபடி நிதானமாக எதையோ யோசித்துக் கொண்டுமிருந்தாள். அவளது முகத்தில் ஒரு அமைதி நிலவியது. ஏமியின் வார்த்தைகள் அவளுக்குப் பிடித்திருந்தன. அவள் தன் தாயைப் பார்த்தாள். அவளும் ஏமியை பார்த்தபடி எதையோ சிந்தித்துக் கொண்டிருந்தாள். அவர்கள் இருவரது முக பாவனையும் ஏமியின் வார்த்தைகளை ஏற்றுக் கொண்டதை உணர்த்தியது.

ஏமி தொடர்ந்தார் 'இங்க பாருமா, நாங்க உனக்கு நல்லது தான் செய்ய விரும்புறோம். நீ விரும்பினால்.. . நீ ஒத்துழைச்சா, உன் குழந்தையையும் அடிக்கடி இங்கே வந்து பார்த்துட்டு போகலாம். உன்னுடைய வாழ்க்கையையும் நீ நல்லா அமைச்சுக்கலாம். அதோட இந்த ஆண் குழந்தைப் பிறந்த உடனே இதன் தாய் இறந்து போயிட்டா. உன் பிரசவத்திற்கு முந்தினநாள் இரவில் தான் இந்தக் குழந்தையும் இங்கு பிறந்தது. இதன் தகப்பனும் குடும்பத்தார்களும் இந்தக் குழந்தையை வளர்க்க விரும்பாமல் எங்களிடமே கொடுத்துவிட்டு போயிட்டாங்க. இந்தப் பிள்ளைக்கு நீ ஏன் தாயாக இருக்கக் கூடாது. ? என்று கேட்டார் ஏமி.

'உனது குழந்தையையும் நாங்க பார்த்துக் கொள்கிறோம். நீ எப்போது வேண்டுமானாலும் இங்க வந்து பார்த்துட்டு போகலாம்' என்ற ஏமியின் வார்த்தைகளால் முனியம்மாளின் முகம் மலர்ந்தது. அவள் சரி என்பதைப் போல தலையசைத்தாள். அவளது கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடி தலையணையை நனைத்துக் கொண்டிருந்தது.

செல்லம்மாளும்'சரிமா.. . அப்போ சரி' என்று தலையை ஆட்டினாள். 'யார் மூலமாவது என் புருசனுக்கு இது தெரிஞ்சிட்டா பெரிய பிரச்சனையா ஆயிருமேம்மா?!' என்றாள் முனியம்மாள்.

'இந்தச் செய்தி வேற யாருக்குமே தெரியாது. எனக்கும், இந்த இரண்டு நர்சுக்கும், உங்க இருவருக்கும் மட்டும் தான் தெரியும். அது மட்டும் இல்லாம இங்கு நடக்கிற இந்த விஷயம் வெளியே போகாது. அதுக்கு நான் உங்களுக்கு உறுதி தருகிறேன்' என்று ஏமி சொல்லவும்... ஆண் குழந்தை தனது கையை வாய்க்குள் வைத்தபடி பசியால். . . தாயைத் தேடி அழுதது. முனியம்மாள் அதை தன் மார்போடு அணைத்துக் கொண்டாள்.

அடுத்த அறையில் அவளது பெண் குழந்தை அமைதியாய். . . . உறங்கி கொண்டிருந்தது.. . . !

**தொடரும்.**

# கோவைத் திருமண்டலத்தின்

## இரண்டாவது

# பேராயர் S.J.சாமுவேல்



'நீங்களோ தேர்ந்தெடுக்கப்பட்ட இனம், அரச குருத்துவத் திருக்கூட்டம், பரிசுத்த குலம், இறைவனுக்குச் சொந்தமான மக்கள்; உங்களை இருளினின்று தம் வியத்தகு ஒளிக்கு அழைத்த இறைவனின் புகழ்ச்சிகளை அறிவிப்பது உங்கள் பணி.' - 1 இராயப்பர் 2:9 (1பேதுரு 2:9) கத்தோலிக்க மொழிபெயர்ப்பு.

இந்த இறைவாக்கிற்கு ஏற்ப அறியாமையிலிருந்து கிறிஸ்துவின் ஞான ஒளிக்கு ஆசாரிய கூட்டமாக அழைக்கப்பட்டு, தலைமை ஆசாரியராக இறை இயேசுவால் உயர்த்தப்பட்டவர் தான் பேராயர் S. J. சாமுவேல். அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு நம்மை அழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும் நற்செய்திப் பணியில் மிக ஆர்வம் கொண்டவர். ஆங்கிலப் புலமையும், திருமறை அறிவும் கொண்ட சிறந்த நிர்வாகி, இவர்தான் கோவைத் திருமண்டலத்தின் இண்டாவது அத்தியட்சர் இது வரலாறு சொல்லும் சாட்சி.

திருப்பத்தூர் லண்டன் மிஷன் ஊழியத்தால் ஆரம்பிக்கப்பட்ட தோரணம்பதி (தருமபுரி சாலையில் அமைந்துள்ளது) பணித்தளத்தில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டவர்களில் பலர் பிற்காலங்களில் - அதாவது 1920ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் புலம்பெயர்ந்து சென்னை செங்கல்பட்டு பகுதிகளுக்குச் சென்றுவிட்டனர். இவர்களின் வழித்தோன்றல்களில் ஒருவர்தான் பேராயர் S. J. சாமுவேல். தோரணம்பதி என்ற கிராமத்தில் ஏழைப் பெற்றோருக்கு மகனாக 15-7-1903 ஆம் ஆண்டு சுப்ரமணியம் பிறந்தார். இளம் வயதில் தந்தையை இழந்தார். விதவைத் தாயோடு செங்கற்பட்டு வந்து வாழ்ந்தார். சமயம் மாறி இயேசுவை ஆண்டவராக ஏற்றுக்கொண்டவர்களுக்கே உரிய பக்தி வைராக்கியம் படைத்தவராக அவர் வளர்ந்தார்.

### இறையியல் அருட்பணி :

பக்தியும், நல்லறிவும், நிறைந்த சுப்ரமணியம் தாம்பரம் கிறிஸ்தவக் கல்லூரியில் இண்டர் மீடியட் படித்து முடித்த பின்பு பெங்களூரு இறையியல் கல்லூரியில் Bachelor of Divinity படித்து முடித்தார். 1933 ஆம் ஆண்டு தென்னிந்திய ஐக்கியத் திருச்சபை மூலம் Church of Scotland Mission . C. S. M. அருட்பணியாளராக அருட்பொழிவு பெற்றார். தூய அந்திரேயா ஆலயத்தில் இளம் ஆயராக பணியேற்றார். அப்பொழுது இரண்டாம் உலகப்போர் நடைபெற்றுவந்த காலம் அது. 1942 முதல் 1945 வரை காஞ்சிபுரம் பகுதியில் ஆயர்பணி. 1945 முதல் 1951 வரை வட்டார தலைவர் (Area Chairman) பணிபெற்றார். 1955 ஆம் ஆண்டு ஸ்காட்லாந்து நாட்டில் உள்ள எடின்பரோ மாநகரில் இறையியல் கல்லூரியில் இறையியல் மேற்படிப்பு படித்தார். 1957 முதல் 1959 வரை இராயப்பேட்டை வெஸ்லி ஆலயத்தில் பணியாற்றிய வேளையில்தான் வேதாகம ஐக்கியச் சங்கத்தின் செயலாளராக தேர்வு பெற்றார்.

### கோவைத் திருமண்டலத்தின் இரண்டாவது பேராயராக

கோவைத் திருமண்டலத்தின் முதல் பேராயர் அப்பாசாமி அவர்கள் 1959 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றபோது, ஆயர் சுப்ரமணியம் ஜோசப் சாமுவேல் அந்த பதவிக்கு தென்னிந்திய திருச்சபை மாமன்றத்தால் நியமிக்கப்பட்டார். உதவி மாடரேட்டர் பேராயர் லெஸ்லி நியூபிகின் தலைமையில் ஈரோடு பிரப் நினைவாலயத்தில் 11-12-1959 ஆம் நாள் கோவைத் திருமண்டலத்தின் இரண்டாவது பேராயராக சுப்ரமணியம் ஜோசப் சாமுவேல் திருநிலைப் படுத்தப்பட்டார். அன்றிலிருந்து அவர் பேராயர் S. J. சாமுவேல் என்ற பெயரால் அழைக்கப்பட்டார். கோவைத் திருமண்டலத்தின் அலுவலகம் பேராயர் S. J. சாமுவேல் அவர்கள் காலத்தில்தான் கட்டிமுடிக்கப்பட்டது இங்கே குறிப்பிடத்தக்கது. கணக்கு வழக்குகளில் மிகவும் நேர்மையாகவும், உண்மையாகவும், செயல்பட்டார். சேலம், ஆத்தூர், ஈரோடு, மற்றும் கோவை மாநகரங்களில் வணிகவளாகங்கள் கட்டி திருமண்டலத்தின் வளங்களைப் பெருக்கினார்.

### ஓய்வு பெற்ற பேராயராக

பேராயர் S. J. சாமுவேல் 1972 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். தமக்குச் சொந்தமான திருக்கழுகுன்றத்தில் உள்ள வீட்டில் குடும்பத்தோடு வசித்து வந்தார். அவர் சைக்கிளில் தான் எங்கும் செல்வார். ஆராதனைகளிலும், ஊழியப் பணிகளிலும், தாமாகவே சென்று பங்கெடுத்துக் கொள்வார்;இவரது வீடு சாமியார் வீடு என்றே அங்கு அழைக்கப்படுமாம். இவர் 30-1-1979 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார். ஒளிக்குள் அழைக்கப்பட்டவர் ஒளியாகவே காணப்பட்டார்; இவரது பணிகள் அனைத்தும் இவருக்குப் பின்சென்று இன்றும் நினைக்கப்படுகிறது

### நீங்கா நினைவுகள்

நமது சேலம் அஸ்தம்பட்டி அடைக்கல நகர் CSI இம்மானுவேல் தேவாலயத்திற்கு அருட்திரு தேவாசீர்வாதம் ஐயர் காலத்தில் (1968-72) ஒரு சமயம் பேராயர் S. J. சாமுவேல் அவர்கள் வந்தது இன்றும் எனது ஞாபகத்தில் மங்கலாக நிழலாடுகிறது. அப்பொழுது எனக்கு ஏழு வயது இருக்கும் என்று நினைக்கிறேன். ஆலய வாசலருகே தரையில் எனது பாட்டி திருமதி. ரூத் முத்தாபரணம் அம்மாள் (1904-1983) அவர்களுடன் அமர்ந்திருந்தபோது பேராயர் S. J. சாமுவேல் அவர்கள் ஆலயத்திற்கு வந்தார்கள். கையில் செங்கோலுடன் ஆடம்பர மேலங்கி அணிந்து, பிஷப் தொப்பி தலையில் திகழ, மெதுவாக ஆலயபடிகளில் அவர் ஏறிவந்தார். அப்பொழுது ஐயாவிற்கு தோத்திரம் சொல்லு என்று சொல்லி, எனது பாட்டி பேராயரை எழுந்து வணங்கினார்கள். அவர் புன்னகையுடன் எங்களை ஆசீர்வதித்து ஆலயம் உள்ளே சென்றார்.

## சேலம் மேட்டூர் CSI நல் மேய்ப்பர் ஆலய பிரதிஷ்டை விழா :

பேராயர் S. J. சாமுவேல் அவர்கள் 28-7-1968 அன்று சேலம் மேட்டூர் அணை CSI நல்மேய்ப்பர் ஆலயத்தை (புதிய ஆலயம்) மங்கலப்படைப்பு செய்து திறந்து வைத்தது இங்கே குறிப்பிடத்தக்கது. இதனை 'ஜீவதேவன்' என்ற பிரபல கிறிஸ்தவ மாதாந்திர இதழாசிரியர் காலஞ்சென்ற சகோ. பால்ராஜ் அவர்கள் தனது மாதாந்திர பத்திரிக்கையான ஜீவதேவனில் குறிப்பிட்டுள்ளார்.

அப்பொழுது சேலம் அஸ்தம்பட்டி அடைக்கல நகர் CSI இம்மானுவேல் ஆலயத்திற்கு வருகைத்தந்த பேராயர் S. J. சாமுவேல் அவர்களோடு அந்த சமயத்தில் ஆலய போதகரும், சபை மூப்பர்களும், சேர்ந்து எடுத்துக்கொண்ட ஞாபகார்த்த ஒளிப்படம். எந்த ஆண்டு என்று தெரியவில்லை.



(இடமிருந்து - அமர்ந்திருப்பவர்கள்) திரு. வில்லியம் (வில்லி வாத்தியார்) ஆசிரியர் (ஓய்வு) அவர் அப்பொழுது சபை காரியதரிசி (Teacher-Catechist என்று அழைக்கப்பட்ட இவர்கள் மிஷன் பள்ளிகளில் ஆசிரியர்களாகவும், அதே சமயம் ஆலயத்தில் உபதேசிமார்களாகவும் ஊழியம் செய்துவந்தனர்.) அருட்திரு. தேவாசீர்வாதம் ஐயர், சபை போதகர் (1968-72), பேரருட்திரு. பேராய்ர் S. J. சாமுவேல், கோவைத் திருமண்டலம், திரு. ஜெகநாதன், சபை பொக்கிஷதார்.

(இடமிருந்து - நிற்பவர்கள்) திரு. விவேகானந்தன், திரு. A. J. அபிஷேகம் , ஆசிரியர் (Teacher-Catechist), திரு. காபிரியேல், ஆசிரியர்(Teacher-Catechist). சேலம் அஸ்தம்பட்டி, அடைக்கல நகர், CSI இம்மானுவேல் ஆலய வரலாற்றில் எனது தேடலில் கிடைத்த அரிய ஒளிப்படம் இது.

பேசும் பொம்மை ஷாந்தகுமார், சென்னை

# கலெக்டர் வேலை வேணாம்! ஐயராகப் போறே. . ன்!



என் மனைவி, சந்திரா ஷாந்தகுமாரின் பாட்டனின் பெயர் ஜி. அருமைநாயகம். அவரைப் பற்றிய இக்கட்டுரையை எழுதுவதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. முக்கியமானக் காரணம், தனக்குக் கிடைத்த கலெக்டர் வேலையைத் தூக்கி எறிந்து விட்டு, போதகர் வேலையைத் தெரிந்து கொண்டார். ஆண்டவருக்குச் சேவை செய்வதில் அவ்வளவு அலாதிப் பிரியம் அவருக்கு!

**போதகர் ஜி. அருமைநாயகம், கடலூர் (1846-1918)**

ஜி. அருமைநாயகம் அவர்கள் என் மாமியார், ஃபெலிஷியாவின் தாத்தா. (அருமைநாயகத்துடைய தகப்பனாரின் பெயர் ஞானக்கண்.) அவர்கள் அப்பொழுது இருந்த திருநெல்வேலி மாவட்டத்தில் எங்கள் குலத்திலேயே முதல் முதலாகப் பட்டம் பெற்றவர். 1876-இல் மதிப்பிற்குரிய இளவரசர் வேல்ஸ் (பின்னாட்களில் இவர் ஜார்ஜ் V அரசராக முடி சூட்டப்பட்டார்) இந்தியாவுக்கு வருகை தந்த போது, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மணியாச்சி இரயில்வே நிலையத்தைத் திறந்து வைத்தார். அத்திறப்பு விழாவில், வேதாகமத்தின் ஒரு பகுதியைப் படித்து, ஒரு புதிய வேதாகமத்தை இளவரசருக்கு அன்பளிப்பாக வழங்கும் பொறுப்பு என்னுடைய பாட்டன் அருமைநாயகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

வேதாகமத்தை வாங்கிக் கொண்ட வேல்ஸின் இளவரசர், எங்கள் பாட்டனின் திறமைகளில் திருப்தியடைந்ததால், அவருக்கு உதவிக் கலெக்டர் அல்லது டி. எஸ். பி. பதவிகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும்படி கவர்னர் மூலம் அழைப்பு விடுத்தார். அக்காலத்தில் அதிக பட்சமாக இந்த இரண்டு பதவிகளை மட்டுமே இந்தியர்கள் அடைய முடியும்.

இவ்விரண்டு பதவிகளும் மிகவும் அதிகாரமும், அலங்காரமும் மிக்கவை என்பதை எங்கள் பாட்டன் அறிவார். இருப்பினும், மிகுந்த பணிவுடன் அப்பதவிகளை நிராகரித்தார். 'நான் போதகராகி, கடவுளுக்கு ஊழியம் செய்யவே வாஞ்சிக்கிறேன்!' என்ற காரணத்தையும் விளக்கினார்.

எங்களுடைய பாட்டன், மேற்கூறிய பணிகளில் ஏதாவது ஒன்றுக்கு இசைவு தெரிவித்திருந்தால், நிறையப் பணம் சம்பாதித்து, வளமான வாழ்க்கைக்கு வழி வகுத்திருக்கலாம். ஆனால் அவர் இவை எல்லாவற்றையும் அற்பமெனத் தியாகச் சிந்தையோடு விட்டொழித்து, ஆண்டவனுக்குத் தன்னை முழுவதுமாய் அர்ப்பணித்துக் கொண்டார்.

மெட்ராஸ் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற அவர்கள், மெட்ராஸில் உள்ள எஸ். பி. ஜி. (Society for the Propagation of Gospel) இறையியல் கல்லூரியில் 1865-இல் பணி புரிந்தார். பிறகு தூத்துக்குடியில் உள்ள கால்டுவெல் கல்லூரியில் முதல் உதவியாளராக 1882 முதல் 1891 வரை சேவை செய்தார். பிறகு 1892 முதல் 1893 வரை இராமநாதபுரம் உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணி புரிந்தார்.

பிறகு, சென்னைப் புரசைவாக்கத்தில் உள்ள அருட்தொண்டர் பவுல் உயர்நிலைப் பள்ளியின் முதல் இந்தியத் தலைமை ஆசிரியராகவும் (1894 முதல் 1905 வரை), புரசைவாக்கத்தில் அருட்தொண்டர் பவுல் ஆலயத்தில் போதகராகவும் (1901 முதல் 1905 வரை), ஏறக்குறைய ஒரே நேரத்தில், பணி புரிந்தார்கள். அவர்கள் பிறகு கடலூரில் உள்ள சி. எஸ். ஐ. ஆலயத்தில் போதகராக 1905 முதல் 1918 வரையில், அதாவது அவர்களுடைய இறப்பு வரை ஊழியம் செய்தார்கள்.

அருமைநாயகத்தின் அருமையான, அர்ப்பணிப்பான கிறித்தவ வாழ்க்கையே, அவருடைய சந்ததிக்கு, முக்கியமாக மூன்றாம், நான்காம் தலைமுறைக்கும் ஆசீர்வாதமாக அமைந்துள்ளது என்பதில் எங்களுடைய குடும்பமே அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துள்ளது.

'நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்!" ஆதி. 12:2

"நான் நிச்சயமாய் உன்னை ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்தின் எண்ணற்ற நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப் போலவும் பெருகப் பண்ணுவேன்!" ஆதி. 22:17

ஆம்! என்னுடைய பாட்டன், அருட்திரு.

அருமைநாயகத்தின் முதல் மனைவி மூலம் மொத்தம் 259 சந்ததியினரும், இரண்டாம் மனைவி மூலம் 161 சந்ததியினரும் பிறந்தார்கள் என்பது எவ்வளவு மகிழ்ச்சியான விஷயம்' இது 1997-ஆம் ஆண்டுக் கணக்கின்படி! அவர்களுள் பலர் உயர்ந்தப் பதவிகளில், உலகின் பல பாகங்களிலும் பணி புரிந்தனர், பணிபுரிகின்றனர் என்பதே ஆண்டவரின் அபரிதமான ஆசீர்வாதத்தின் அடையாளமாகும்.

**எங்களுடைய குடும்ப மரம்:**

'ஃபேமிலி ட்ரீ' என்றழைக்கப்படும் எங்களுடைய குடும்ப மரத்தை எனது மாமனார், திரு ஜான் நெல்சன் அவர்கள் மிகவும் அரும்பாடுபட்டு உருவாக்கினார்கள். இதற்காக பல உறவினர்களைச் சந்தித்து, விவரங்களைச் சேகரித்தார்கள். ஏனெனில் எங்கள் பாட்டன் அருமைநாயகத்தின் குடும்பம் மிகவும் பெரிது. மேலும் பழமை வாய்ந்தது. நான் இக்கட்டுரையை இலகுவாக எழுத முடிந்தமைக்கு என் மாமனார் அமைத்துத் தந்த இந்த மரமே பேருதவியாக இருந்தது. மேலும் எனது மாமனார் எங்கள் குடும்பத்தின் எல்லா விவரங்களையும் சேகரித்து, கோர்வையாக்கி, தானாகத் தட்டச்சு செய்து, 52 பக்கங்களைக் கொண்ட ஒரு புத்தகமாகவே வெளியிட்டார்கள். பிறகு அதன் நகல்களை எடுத்து, எல்லா உறவினர் குடும்பங்களுக்கும், புத்தகங்களை இனாமாக வழங்கினார்கள்.

**முன்னுரை:**

இப்புத்தகத்தின் முத்தாய்ப்பான விஷயம்' முன்னுரையை வழங்கியது சகோதரர், டி. ஜி. எஸ். தினகரன் அவர்கள். ஏனெனில் அவரும் எங்கள் பாட்டனின் கொள்ளு பேரர்களுள் ஒருவர் என்பது குறிப்பிடத் தக்கது. முன்னுரையில் அவர் குறிப்பிட்டதாவது:

'என் மனதைத் தொட்ட ஒரு நிகழ்ச்சி இது. என் பாட்டன் இரு குதிரைகள் பூட்டிய ஒரு திறந்த நான்கு சக்கர வண்டியை வைத்திருந்தார்கள். அருகே உள்ள கிராமங்களுக்குச் செல்லவும், தன்னுடைய ஆலய அங்கத்தினர்களைச் சந்திக்கவும் அவ்வண்டியைப் பயன்படுத்தினார்கள். அக்குதிரைகளை மிகவும் அன்புடனும், அக்கறையுடனும் வளர்த்து வந்தார்கள். என் பாட்டன் இறந்தவுடன், அந்த இரண்டு குதிரைகளும் கண்ணீர் சிந்தின. அவருடைய பூத உடலை அடக்கம் செய்ய அந்த வண்டி மூலம் வீட்டிலிருந்து எடுத்துச் சென்றார்கள். அப்படி செல்லும் வழியிலும், புதைத்த பிறகும்கூட அவை அழுவதை நிறுத்தவே இல்லை. இதைப் பார்த்த அனைவரும் ஸ்தம்பித்து நின்றனர்.

"ஜோனத்தானின் இருதயமும், தாவீதுடைய இருதயமும் பின்னிப் பிணைந்திருந்தது போல (முதல் சாமுவேல் 18:1-3), அக்குதிரைகளின் இருதயமும், என் பாட்டனின் இருதயமும் பிணைந்திருந்தன போலும்! என் பாட்டனின் அன்பும், பாசமும் அக்குதிரைகள் மீது அந்த அளவுக்கு வைத்திருந்தார் என்றால், அவர்கள் எந்த அளவுக்கு தன் ஆலய விசுவாசிகளிடம் அன்பு பாராட்டியிருந்திருப்பார்கள்?

"ஆண்டவன் என் பாட்டனுடைய சந்ததியாரைப் பாத்திரம் நிரம்பி வழியத் தக்கதாக ஆசீர்வதித்திருக்கிறார்; ஆசீர்வதிக்கிறார்; ஆசீர்வதிப்பார் என்பதனை இந்த வசனத்தில் மூலம் உணரலாம்.

"நீதிமான் தன் உத்தமத்திலே நடக்கிறான்; அவனுக்குப் பிறகு அவன் பிள்ளைகளும் பாக்கியவான்களாயிருப்பார்கள்." நீதிமொழிகள் 20:7

**எங்கள் குடும்பத்தில் நடந்த சுவாரஸ்யமான விஷயங்களை என் மாமனார் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்கள்:**

1. "என் பாட்டன், அருமைநாயகத்துக்கு இரண்டு மனைவிகள். இரு மனைவிகள் மூலமும் எட்டெட்டு குழந்தைகள். ஆம்! பாரபட்சமில்லாத வாழ்க்கை! முதல் மனைவி இறந்ததாலேயே இரண்டாவது மனைவியை மணக்க நேரிட்டது. (அவருக்கு வீட்டிலேயே வரப் பிரசாதமாக ஒரு குட்டிச் சபை அமைந்து இருந்தது என இக் கட்டுரை ஆசிரியராகிய நான் கருதுகிறேன். )
2. "என் பாட்டனின் முதல் மகன், இராபர்ட் அருமைநாயகம் தன்னுடைய அத்தை மகளான சுந்தரவடிவை மணந்தார். சுந்தரவடிவின் ஊர்



சுரண்டை. இந்துக் குடும்பத்தில் பிறந்து கிறித்தவ மதத்துக்கு மாறியவர். (ஆனால் அவருடைய ஐந்து சகோதரர்களும் இன்னும் இந்துக்களாகவே உள்ளனர். ). அவர்களுடைய மகளும், என்னுடைய மாமியாருமான ஃபெலிஷியா, அவருடைய மாமன் மகனாகிய, ஜான் நெல்சனை மணந்தார். அவர்களுடைய மகன் சாமுவேல், தன்னுடைய மாமன், திரு. இராபர்ட் அருமைநாயகத்தின் மகளாகிய வசந்தியை மணந்தார். இம்மூன்று திருமணங்களும் மருத்துவ ஆலோசனைக்கு எதிர்மறையாக இருப்பினும், இப்படித் தொடர்ந்து மூன்று சந்ததிகளாக, இரத்த உறவில், நெருங்கிய சொந்தத்தில் திருமணம் புரிந்த போதிலும், அவரவர்களுடைய குழந்தைகள், மற்றும் பேரக் குழந்தைகள் அனைவரும் அறிவாற்றலிலும், ஆரோக்கியத்திலும் சிறந்து விளங்கியது, விளங்குவது ஆண்டவரின் அபரிமிதமான ஆசீர்வாதத்தையே காட்டுகிறது.

3. "என் பாட்டனின் கடைசி மகன் 22. 6. 1911 அன்று பிறந்ததால் அவருக்கு ஜார்ஜ் அருமைநாயகம் எனப் பெயரிடப்பட்டது. காரணம், அதே தினத்தில்தான் ஐந்தாவது ஜார்ஜுக்கு இங்கிலாந்து நாட்டு அரசராக மகுடம் சூட்டப்பட்டது. மற்றொரு சுவையான விஷயம், ஜார்ஜ் அருமைநாயகத்தின் மூன்று மருமகள்களும் தற்செயலாக உடல் பயிற்சி பயிற்றுவிப்பாளர்களாக அமைந்தது. மேலும் அவர்கள் கடலூர் ஓ. டி. -இல் உள்ள சி. எஸ். ஐ. செயின்ட் தாவீது மேல் நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றும்போது, ராபர்ட் க்ளைவ் சில காலம் வாழ்ந்த வீட்டில் தங்கினார்கள்.

4. "எனது பாட்டன், அருமைநாயகத்தின் மருமகனான, சற்குணருக்கு (எனது மாமனாரின் தந்தை) நான்கு மனைவிகள். (ஓ மை காட்!) ஆனால், ஒவ்வொரு மனைவியும் இறந்த பின்பே, முந்தைய மனைவியின் குழந்தைகளைப் பராமரிக்க அடுத்த மனைவியை மணந்தார். அந்த மனைவிமார்களின் இறப்புக்கான காரணங்கள் தெரியவில்லை. (இப்படி "நாலு பொண்டாட்டிக்காரனின்" மகனாகப் பிறந்த என் மாமனாருக்கு, பெண் கொடுக்க, என் அத்தையின் பெற்றோர் தயங்கினர்.) ஆனால், இவர்கள் கிறித்தவத்தில் வைராக்கியமுள்ள பெந்தெகோஸ்தே சபையைச் சார்ந்தவர். இவர்கள் அறந்தாங்கியில் வாழ்ந்த போது எந்த மருந்தையும் பயன்படுத்தவில்லை என்பது நமது புருவத்தை உயர்த்தி ஆச்சரியப்பட வைக்கிறது. கடவுள் அனைத்து நோய்களிலிருந்தும் தங்களைக் காத்துக் கொள்வார் என்பதில் அவருக்கு அலாதி நம்பிக்கை. மேலும் அவருடைய மனைவியின் நகைகள் அனைத்தையும் பாத காணிக்கையாக ஆலயத்துக்கு வழங்கியவர். அது மட்டுமல்ல. கடவுளின் நான்காவது கற்பனையான "ஏழாவது நாளை ஓய்வு நாளாக உபசரிப்பாயாக!" (யாத்திராகமம் 20:10) என்ற அறிவுரைக்கு இணங்க எல்லா ஞாயிற்றுக் கிழமைகளிலும் பழைய சாதம்தான்! இவர்கள் அக்காலத்தில், திருமணத் தம்பதிகளுக்கு ரூ. 13 மதிப்புள்ள ஒரு சவரன் தங்க நாணயத்தைப் பரிசாகக் கொடுப்பது வழக்கம். (அக்காலத்தில், அதாவது 1939-இல், என் மாமனாரின் எஸ். எஸ். எல். சி-இக்கான பள்ளிக் கட்டணம் வெறும் ஐந்தே ரூபாய்தான். விடுதிக் கட்டணமும் ஐந்து ரூபாய். ஒரு ரூபாய்க்கு 32 முட்டைகள் கிடைத்தன! இதெல்லாம் சும்மா உங்க பொது அறிவுக்குதான்!)

5. என் பாட்டனின் கொள்ளுப் பேரனான சகோதரர் தினகரனும், அவருடைய மகனான பால் தினகரனும் இயேசு அழைக்கிறார் தேவ ஊழியத்தை நடத்தி வருகின்றனர்.

6. என் பாட்டனின் குடும்பத்தில் நடந்த கலப்புத் திருமணங்களுக்குப் பஞ்சமில்லை. மேலும் நாடு கடந்தும் பெண்களை விவாகம் செய்தனர். கொள்ளுப் பேரனான டேவிட், ஷேலி எனும் இங்கிலாந்து நாட்டுப் பெண்ணையும், மற்றொரு கொள்ளுப் பேரனான இரஞ்சித் (திருச்சியில் உள்ள பெனட் அண்ணனின் மகன்) ஒரு இங்கிலாந்துப் பிரஜையையும் மணந்தார்கள்.

7. என் பாட்டனின் மருமகளான மங்களம் கிறிஸ்டோபர் அருமைநாயகம் அக்காலத்திலேயே கார் வைத்திருந்தார்கள். சென்னையில் அப்பொழுது அதாவது 1930-களில், 100 நபர்கள் மட்டுமே கார் வைத்திருந்தனர். மேலும், அவர்கள் மட்டுமே சென்னையில் பெண் ஓட்டுனராக வலம் வந்தது நம்மை வியக்க வைக்கிறது.

8. மற்றொரு கொள்ளுப் பேத்தியான பிரியா பால் (பால் கிறிஸ்டோஃபரின் மகள்), இந்திய நாட்டில் வான ஊர்தியை ஓட்டும் பைலட்டுக்காக முதல் முதலாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 7 பேர் கொண்ட பெண்கள் குழுவில் இடம் பெற்று மிகவும் பிரபலமானார்.

9. மற்றொரு கொள்ளுப் பேரனான வசந்த் வில்லியம்ஸ் (செல்லதுரை மற்றும் வசந்தியின் மகன்) பெரிய ஸ்குவாஷ் சாம்பியன். இந்தியாவில் பல பதக்கங்களை வென்றவர். மேலும் ஆசிய விளையாட்டில் வெண்கல பதக்கம் பெற்றவர்.

இதைப் படிக்கும் அனைவரையும் தங்கள் குடும்ப மரத்தை (ஃபேமிலி ட்ரீ) உருவாக்கி, ஆவணப் படுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன். குடும்பப் படங்களோடு 'யூ ட்யூபில்' பதிவு செய்யப்படும் பட்சத்தில், எக்காலத்திலும் அழியாமல் பாதுகாக்கப்படும். இச்சேவை பிற்கால சந்ததிக்கு மிகவும் பயன்படும் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை!

ந. சூரிய மூர்த்தி,
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்மொழித் துறை,
சென்னைப் பல்கலைக்கழகம் – 05

# காலந்தோறும் கருணாமிர்த சாகரத்திரட்டு– ஒளிபெறும் உருப்படிகள் – பகுதி – 2

கடந்த ஏப்ரல் மாத இதழில் "ஒளி பெறும் உருப்படிகள் – பகுதி - 1" -ஐ வெளியிட்டிருந்தேன். அதன் தொடர்ச்சியாக இவ்விதழில் "பகுதி – 2" – ஐ வெளியிடுகின்றேன். இதனுடன் இப்பகுதி நிறைவுறுகின்றது.

## பாவியாகிய தன்மேல் கிருபையாயிருக்க அருள்நாதனைப் பிரார்த்தித்தல்

நவரோஜ் ரூபகதாளம்.

பு ˆது ˆநி ச ˆரி ˆக ழு பா ழு ˆக ˆரி ச ˆநி ˆது பா.

| 2 | 4 | 2 | 4 | 2 | 4 | 2 | 4 |
|---|---|---|---|---|---|---|---|
| கம<br>நிச | பாமக<br>ரீரிக | பம<br>மக | காமக<br>காரிசாநி | ரிரி<br>நிச | காமப<br>ரீரிக | மக<br>மப | கரிசநி<br>மகரிசா |

**கண்ணி.**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கம | பாமக | பம | காமக | ரிரி | காமப | மக | கரிசநி |
| அடி | யார்மனம் | குடி | யாய்க்கொண்ட | அரு | ளே ஆதிப் | பொரு | ளே ஒரு |
| நிச | ரீரிக | மக | காரிசாநி | நிச | ரீரிக | மப | மகரிசா |
| பிடி | யாயுனைப் | பிடித் | தேன் எந்தன் | பிழை | யேபொறுத் | தரு | ளே - - |

**கண்ணிகள்.**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| அடி | யார்மனம் | குடி | யாய்க்கொண்ட | அரு | ளே ஆதிப் | பொரு | ளே ஒரு |
| பிடி | யாயுனைப் | பிடித் | தேன் எந்தன் | பிழை | யே பொறுத் | தரு | ளே - - |

2

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| களி | யேன்மனம் | பணி | யேன் பதம் | குனி | யேனுனை | துதி | யேனெனை |
| இனி | யேன்இவன் | என | வேதள்ள | வெண் | ணாதெனக் | கரு | ளே - - |

3

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கண்ணா | ல் கண்ணீர் | உகுத் | தேமனம் | கனிந் | தேசிரம் | பணிந் | தேமிக |
| எண்ணா | தெண்ணி | யுடை | ந்தேன்மன | திரங் | கி எனக் | கரு | ளே - - |

4

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கை | யும் கள | வாக | என்னைப் | பிடித் | தே கொல்ல | துடித் | தார்துயர் |
| செய்யு | ம் வினை | தொலை | த்தேதிடம் | இன் | றே சொல்லி | அரு | ளே - - |

5

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| உந் | தாயுயிர் | தந் | தாய்துர்க் | கந் | தம் வரும் | பிண | மாமெந்தன் |
| நொந் | தஉடல் | உயிர் | க்க உயிர் | தந் | தாண்டிட | அரு | ளே - - |

6

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| தொல் | லைபுவி | இட | மேநலம் | இல் | லை என்று | அறி | ந்தேன் உந்தன் |
| சொல் | லையுண்டு | களித் | தே நிற்கும் | நல் | ல பதம் | அரு | ளே - - |

7

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| திரு | வாய்மொழி | கேட் | டு அதின் | படி | யே நடந் | திட | வேசொந்தம் |
| பெறு | வேன்என் | றுமற | வாதென்னை | உற | வாய்நினைந் | தரு | ளே - - |

8

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வரு | வாய்வழி | தனி | லேகாட்சி | தரு | வாயென | திட | மேவந்து |
| குரு | வாய்மொழி | தர | வே உந்தன் | திரு | வாய்திறந் | தரு | ளே - - |

9

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மலை | போல்வரும் | அலை | வாய்ப்பட்டு | மலைந் | தேன்மிக | உலைந் | தேனினி |
| மலை | யாதிரு | வென | வே ஆறு | தலை | யே தந்து | அரு | ளே - - |

10

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கொடி | யதுயர் | ஊ | றித்தொல்லை | உறை | யும்பவக் | குறை | தீரநல் |
| வடி | வாமுந்தன் | அங் | கி ஓரம் | பிடித் | தேன்குண | மரு | ளே - - |

11

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கனி | வாய்திரு | மக | வாய்வந்து | கனி | யால்வரு | பவ | மேதீர்த்த |
| கனி | யேஜீவ | கனி | யேதரக் | கரு | ணைகூர்ந்து | அரு | ளே - - |

12

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| புவி | யிலுள்ள | வரை | யுமுந்தன் | புக | ழேசொல்லித் | துதிப் | பேன்திரு |
| செவி | யில்வரக் | குவித் | தேன்கரம் | அபி | ராமகுலத் | தரு | ளே. |

**ஓ பாவநாசா என் மனமும் சரீரமும் நோக உன்னை எங்கெங்கு தேடினேன் நீ எங்கே இருக்கிறாய் சொல் என்பது.**

பலஹம்சா. ஆதிதாளம்

சரிம பதச சநிதப மரிமகசா.

| 10 | 8 | 8 |
|---|---|---|
| சா - - தசரிமகரி | - சரிகரீச | ரீ - - ரீசா |
| நிதநிபதசரிமகரி | - மபதபாம | ரீ - - ரீசா |
| நிதநிபதசரிமகரி | - சரிகரீச | ரீ - - தா - - |
| சா - - - - - - - - - - - - - - | - - - - - - - - | - - - - - - - - |
| - - - மபதபபா - - பமரீ | ரீ – சரிமரீ | ரீ - - ரீ - - |
| - - - மபதபாமபமபதபபாபம | ரீ – சரிமரீ | ரீ - - ரீ - - |
| - - - மபதபமபாமபதபபாபம | ரீ – சரிமப | தசதசதாபா |
| - - பதசாசாசாநிதாதாநிதபம | பா - - - - - - | பா - - - - - - - |
| - - பதசாசாசாநிததாநிதபா | - பாதபமமாபமரி | ரீ - - ரீசா |

| | | |
|---|---|---|
| நிதநிபதசரிமகரி<br>நிதநிபதசரிமகரி<br>சா - - - - - - - - - - - - - -<br><br>- - - பபமரிசரிமமபமரீ<br>ரீ – பபமரிசரிமமபமரி<br>- - - ததசரிரீமககாரீ<br>- - - மபதபமபமபதபபாபம<br>- - - மபதபமபமபதபபாபம<br>- - பதசாசாசாநிததாநிதபம<br>- - பதசாசாசாநிததாநிதபா<br>நிதநிபதசரிமாகரி<br>நிதநிபாதசரிமகரி<br>சா - - - - - - - - - - - - - - | - சரிகரீச<br>- சரிகரீச<br>- - - - - - - -<br><br>- - - சரிமரி<br>- - - சரிமரி<br>- - - சரிமப<br>ரீ – சரிமரி<br>ரீ – சரிமப<br>பா - - - - - -<br>- - பாதபமமாபமரி<br>- மபதபாம<br>- சரிகரீச<br>சா - - - - - - | ரீ - - ரீசா<br>ரீ - - தா - -<br>- - - - - - - -<br><br>ரீ - - ரீ - -<br>சாசாநிதபா<br>தசதசதாபா<br>ரீ - - ரீ - -<br>தசதசதாபா<br>பா - - - - - -<br>ரீ - - ரீசா<br>ரீ - - ரீசா<br>ரீ - - தா - -<br>சா - - - - - - |

**பல்லவி.**

| | | |
|---|---|---|
| சா - - தசரிமகரி | - சரிகரிச | ரீ - - ரீசா |
| - - - - சிந்தை வா - - டி | - நொந்துதே - | டி - - னே - - |
| நிதநிபதசரிமகரி | - மபதபாம | ரீ - - ரீசா |
| - - - ன் சிந்தை வா - - டி | - நொந்துதே - | டி - - னே - - |
| நிதநிபதசரிமகரி | - சரிகரீச | ரீ - - தா - - |
| - - - ன் பந்த மா – ற்றிட | - வந்தநா - | - - தா - - |
| சா - - - - - - - - - - - - - - | - - - - - - - - | - - - - - - - - |
| னே - - - - - - - - - - - - - - | - - - - - - - - | - - - - - - - - |

**அனுபல்லவி.**

| | | |
|---|---|---|
| - - - மபதபபா - - பமரீ | ரீ – சரிமரி | ரீ - - ரீ - - |
| - - - அந்தரம்பூ - - - மி - - | - - - தந்த – கு | ணா - - ளா - - |
| - - -மபதபமபமபதபபாபம | ரீசரிமரி | ரீ - - ரீ - - |
| - - - அந்தரம்பூ - - - - - - மி - | - - - தந்தகு | ணா - - ளா - - |
| - - - மபதபமபமபதபபாபம | ரீ – சரிமப | தசதசதாபா |
| - - - அந்தரம்பூ - - - - - - மி - | - - - தந்தகு | ணா - - ளா - - |
| - - பதசாசாசாநிததாநிதபம | பா - - - - - - | பா - - - - - - |
| - - சுந்தர சீ - - யோ - - - ன் | - - - - - - - - | - - - - - - - - |
| - - பதசாசாசாநிததாநிதபா | - பாதபமமாபமரி | ரீ - - ரீசா |
| - - சுந்தர சீ - - யோ - - ன் | - சொ - ந்தமா - - - | ணா - - ளா - - |
| நிதநிபதசரிமகரி | - மபதபாம | ரீ - - ரீசா |
| - - - - சிந்தை வா - - டி | - நொ - ந்துதே - | டி - - னே - - |
| நிதநிபதசரிமகரி | - சரிகரீச | ரீ - - தா - - |
| - - - ன் பந்த மா – ற்றிட | - வ - ந்தநா - | - - - - தா - - |
| சா - - - - - - - - - - - - - - | - - - - - - - - | - - - - - - - - |
| னே - - - - - - - - - - - - - | - - - - - - - - | - - - - - - - - |

**சரணம்.**

| | | |
|---|---|---|
| - - - பபமரீசரிமமபமரீ | - - - சரிமரீ | ரீ ரீ ரீ - - |
| - - - அலைதனில் து – யி – லோ | - - - மலைதனில் | நிலையோ - - - |
| - - - பபமரீசரிமமபமரீ | - - - சரிமரீ | சசநிதபா |
| - - - அலைதனில் து – யி – லோ - - - | - - - மலைதனில் | நிலையோ - - - |
| - - - ததசரிரீமககாரீ | - - - சரிமப | தசதசதாபா |
| - - - கலை நிறைதூ - - - யர் | - - - களரியில் | த – லை – யோ – |
| - - - மபதபாமபமபதபபாபம | ரீ – சரிமரி | ரீ - - ரீ - - |
| - - - விலை செய்த பா - - - - - வி என் | - - - சிலைதரு | நோ - - - வோ - - - |
| - - - மபதபாமபமபதபபாபம | ரீ – சரிமப | தசதசதாபா |
| - - - விலை செய்த பா - - - - - வி என் | - - - சிலைதரு | நோ - - - வோ - |
| - - பதசா சாசாநிததாநிதபம | பா - - - - - - | பா - - - - - - |
| - - அலைந்து த வி - த்தே - - - ன் | ரீ - - - - - - | - - - - - - - - |
| - - பத சா சா சா நித தாநி தபா | - பாதபமமாபமரி | ரீ - - ரீசா |
| - - அலைந்து தவி - - த்தே - - - ன் | - ஆ - - பிரா - - ம் | தே - - வா - - |
| நிதநிபதசரிமகரி | -சரிகரீச | ரீ - - ரீசா |
| - - - - சிந்தை வா - - டி | - நொந்துதே - | டி - - னே - - ன் |
| நிதநிபதசரிமகரி | - சரிகரீச | ரீ - - தா - - |
| - - - - பந்தமா – ற்றிட | - வ – ந்த நா - | த - - னே - - |
| சா - - - - - - - - - - - - - - | - - - - - - - - | - - - - - - - - |

**பல்லவி.**

| | | |
|---|---|---|
| சிந்தைவா – டி | - நொந்துதே - - | டி – னே |
| - - ன் பந்தமாற்றிட | - வ – ந்தநா | - - த - - |
| னே - - - - - - | - - - - | - - - - |

**அனுபல்லவி.**

| | | |
|---|---|---|
| - அந்தரம்பூ - - - - மி | - த – ந்தகு | ணாளா |
| சுந்தர சீ - - - - யோ - | - ன் - - - | - - - - |
| சுந்தர சீ - - - யோன் | - சொந்தம - - | ணா - - ளா - - |
| - - - சிந்தைவாடி | - நொந்துதே - | டி – னே |
| - - - ன் பந்தமாற்றிட | - வ – ந்தநா | - - - - த – |
| னே - - - - - - | - - - - | - - - - |

**சரணம்.**

| | | |
|---|---|---|
| அலைதனில் து – யி – லோ - | - - - - - மலைதனில் | நிலையோ |
| அலைதனில் து – யி – லோ - | - மலைதனில் | நிலையோ |
| கலைநிறை தூ - - - யர் | - களரியில் | த – லை – யோ |
| விலைசெய்த பா - - - - வி என் | - சிலைதரு | நோ - - வோ - - |
| அலைந்து த – வி - - த்தே - - | ன் - - - - | - - - - |
| அலைந்து த – வி - - த்தே – ன் | - ஆ – பிராம் | தே - - வா - |
| - - - - சிந்தைவா - டி | நொந்துதே | டி – னே |
| - - - ன் பந்தமாற்றிட | - வந்தநா | - - - த - - |
| னே - - - - - - - | - - - - | - - - - |

கடந்த இதழில் கையாண்ட பதிப்புமுறையையே இம்முறையும் கையாண்டிருக்கின்றேன்.

‘கருணாமிர்த சாகரத்திரட்டு’ முதற்பதிப்பில் (1907) அமைந்த 4, 21, 22, 74 ஆகிய எண்கள் கொண்ட நான்கு உருப்படிகளே இதுவரை அடுத்த பதிப்புகளைக் காணாமல் தேங்கி நின்றவை. முந்தைய இதழில் 4, 21 ஆகிய உருப்படிகள் வெளியாகின. இவ்விதழில் 22, 74 ஆகிய உருப்படிகள் வெளியாகின்றன.



# ‘கொள்ளைக்குக் கொண்டாட்டம் கொடையில்’


கொள்ளை நோயான காலரா அவ்வாண்டில் (1859) அநேகரைக் கொள்ளை கொண்டது. அப் பிராந்தியமனைத்திலும் மக்களைப் பெரும்பீதி பிடித்துக்கொண்டது. எங்கும் கலக்கம்; திகில்; கோயில்கள் தோறும் அம்மனுக்குக் கொடை. கொடைக்கு மக்கள் கூடக் கூடக், காலராவும் ‘கொண்டாட்டத்’துடன் பரவியது. மிஷனெரிமாரும் சபையூழியர்களும், சாதி மத பேதமின்றி காலராக் கண்ட மக்களுக்கு மருந்து கொடுத்துப் பிழைக்கவைத்தார் எனினும், வேறு பலர் மாளவே செய்தனர்.

டோனாவூரில் கிறிஸ்தவனென்றும் இந்துவென்றும் வர்ணிக்கப்படக் கூடாத பேர் கிறிஸ்தவரொருவரிருந்தார். ஈசாக்கு என்று பெயர். அம்மனிதன் ஒருநாள் அவ்வூரிலிருந்த இந்து நண்பரிடம் போய்ச் **“சொப்பனமொன்று கண்டேன். ஒரு பேய் என் கனாவில் வந்து, இவ்வூரார் ஒன்று, ‘என்னை வணங்கவேண்டும்; அல்லது இயேசுவை வணங்கவேண்டும். இங்கு பாதி, அங்கு பாதியென்றிருக்கக் கூடாது. அப்படியிருக்கும்வரை, நான் காலராவைக்கொண்டு இவ்வூரை வாதிக்கத்தான் செய்வேன்’ என்றது,”** என்றார். இச் செய்தி ஊரில் பரவியதும், பேய் வணக்கத்தார் அதை உண்மையென்று நம்பி, ஊருக்கு வெளியே சுமார் அரைமைல் தள்ளி ஒரு புது பேய்க் கோயில் கட்டி, அப்பேய்க்கு கொடை கொடுக்க ஏற்பாடு செய்தார்கள். கொடையில் பேயாடுவதற்கென்று, வெளியூரொன்றிலிருந்து ஒரு பேயாடியையும் தருவித்துக் கொண்டார்கள். கொடையும் ஆரம்பித்தது.

அந்நாளில் டோனாவூர் மிஷனெரியாயிருந்தவர். பிக்ஃபோர்ட் ஐயர் (Rev. J. Pickford). அவர் அன்று மாலை கொடை நடக்குமிடத்துக்குச் சென்று, கூடியிருந்த பெருங் கூட்டமான அம்மக்களுக்குச் சுவிசேஷத்தை எடுத்துக் கூறினார். உடனே அப்பேயாடி, ஆட்டத்தை நிறுத்தி, அவரிடம் சென்று, பிரசங்கத்தை நிறுத்தச் சொல்லி, வாதாட ஆரம்பித்தான். ஐயர் பொறுமையுடன், “சூரியனையும் சந்திரனையும் பேயா சிருஷ்டித்தது?” என்று கேட்டார். அவன், “பேய் அவற்றைச் சிருஷ்டிக்கவில்லைதான். ஆனால், மனிதர்களைக் கொல்லவும் நல்ல பதனீர் கொடுத்துப் போஷிக்கவும் அதற்கு சக்தியுண்டு,” என்று எதிர்வாதம் செய்து, மக்களைத் தூண்டிவிட்டு, அவரை விரட்டிவிட்டான்.

அன்றிரவு திடீரென்று காலரா வியாதி அவனையும் தாக்கிவிட்டது! அந்தோ பாவம்! காலையில் அவன் இறந்து விட்டான். மக்களைத் திகில் பிடித்துக்கொண்டது. ஆனால் கொடை நிர்வாகிகள், அப்பேயாடி கொடை விதிகளில் ஏதோ ஒன்றில் தவறிவிட்டான். அதினால் தான் பேய் அவனைக் கொன்றுவிட்டது,’ என்று சமாதானம் கூறி, அன்று மாலை, களக்காடு என்றவூரிலிருந்து ஒரு பேயாடியையும் அவன் பெண்சாதியையும் பேயாடுவதற்கென்று அழைத்து வந்தார்கள். கொடையும் தொடர்ந்து நடந்தது. ஆனால் இரண்டு நாட்களுக்குள் அவ்விருவருமே காலராவுக்குப் பலியானார்கள். உடனே கொடையை நிறுத்தினார்கள். மற்ற கிராமங்களிலும் கொடைகள் நிறுத்தப்பட்டன. அதினால் மக்கள் கூட்டங்கூடுவது குறைந்தது. காலராவின் வேகமும் தணிந்தது!

அதுமுதல் டோனாவூர் கிறிஸ்தவர்கள் முன்னிலும் அதிகமாக தேவபக்திக்கடுத்தவைகளில் கவனமாயிருந்து வரலானார்கள்.



# ரேனியசும் பிற சமய ஆசிரியரும்

தேவராஜ் அதிசயராஜ், மதுரை

ரேனியஸ் ஐயர் காலத்தில் கிறிஸ்தவ பள்ளிகளில் கிறிஸ்தவ ஆசிரியர்களும் கிறிஸ்தவர் அல்லாத ஆசிரியர்களும் பணி புரிந்தார்கள். கல்கத்தாவின் பிஷப்பாக இருந்த டாக்டர் டர்னர் இந்த பகுதியில் 1831 ஆம் ஆண்டு பயணம் செய்த போது இதனை கண்டார். அவர் இது குறித்து சென்னையில் உள்ள சிஎம் எஸ் தொடர்பு கமிட்டி செயலருக்கு ஒரு கடிதம் எழுதினார்.

அக் கடிதத்தில், 'நம்முடைய பள்ளிகளில், கிறிஸ்தவ சத்தியங்களை சொல்லிக் கொடுக்க கிறிஸ்தவர் அல்லாத ஆசிரியர்கள் தேவைதானா? என்ற முக்கியமான கேள்வி ஒன்றை கேட்டிருந்தார். மேலும் இந்த பழக்கம் உறுதியாகவும் படிப்படியாகவும் நிறுத்தப்பட வேண்டும் என்றும் கேட்டிருந்தார். இது குறித்த கருத்தை வேண்டி சென்னை சி எம் எஸ் தலைமையகம் ரேனியஸ் ஐயரிடம் விளக்கம் கேட்டது.

ஏப்ரல் 30 1831 ஆம் ஆண்டு ரேனியஸ் ஐயர் இதற்கு பதில் கடிதம் அனுப்பி இருந்தார்.

**அக்கடிதத்தில் அவர் கூறியிருப்பது எல்லாமே இன்றைய கிறிஸ்தவர்கள் அறிய வேண்டியது அவசியமென எண்ணி அவர் எழுதிய கடிதத்தை அப்படியே தருகிறோம்:.**

**பிரியமான அருட்திரு ஐயா,**

ஏப்ரல் 14 ஆம் தேதி நீங்கள் அனுப்பிய கடிதமும் கல்கத்தா பிஷப்பின் கடித நகலும் பெற்றுக் கொண்டேன். தற்போது நமது பள்ளியில் பணி புரியும் கிறிஸ்தவ மற்றும் கிறிஸ்தவர் அல்லாத ஆசிரியர்கள் பற்றிய ஒரு தொகுப்பை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

கிறிஸ்தவ பிள்ளைகளை கிறிஸ்தவ பள்ளிகளில் கற்பிப்பதற்கு கிறிஸ்தவ ஆசிரியர்களே வேண்டும் என்பதை நான் முழுவதுமாக ஏற்கிறேன். கிறிஸ்தவர்களையே பணியமர்த்த நாங்களும் விரும்புகிறோம். என்றாலும் கிறிஸ்தவர் அல்லாத ஆசிரியர்களை நியமிக்க வேண்டிய அவசியமும் இருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஒரு சில இடங்களில் பிற மதத்தவர் தங்கள் பிள்ளைகளை கிறிஸ்தவ ஆசிரியர்களிடம் அனுப்ப மறுக்கின்றனர். தவிர கிறிஸ்தவ ஆசிரியர்களின் பற்றாக்குறைவும் சில இடங்களில் இருக்கிறது. இந்த இரண்டு காரணங்களும் நிறைவு பெறும் போது பிற மதத்து ஆசிரியரை நியமிக்கும் பிரச்சனை முடிந்து போகும். பள்ளிகளை பொறுத்தவரையில் அவற்றின் பிரகாசமான எதிர்காலம் மற்றும் இலக்கு மட்டுமே நம்முடைய நோக்கமாய் இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். நமது பள்ளியின் பிள்ளைகள் தங்களது பழக்க வழக்கம், எண்ணங்களின் செயல்பாடுகள், நடக்கைகளில் முழுக்க முழுக்க பிற சமயத்தவராகவே இருக்கிறார்கள். அவர்கள் கையில் இருக்கும் புத்தகங்கள் பிராமண ஆசிரியர்களின் ஸ்லோகங்கள், மந்திரங்கள் நிரம்பிய மலபார் பனை ஓலைகளைப் போலவே தோன்றுகிறது.

பிற சமயத்து ஆசிரியர்களை பணியில் அமர்த்துவதில் உள்ள சிக்கலை விட, பள்ளிகளை நிர்வகிப்பதில் தான் அதிக சிக்கல் இருக்கிறது.

ஆசிரியர்கள் கிறிஸ்தவ போதனை பெறாவிட்டால் அல்லது பெற விரும்பாவிட்டால், மாணவர்களுக்கு ஞானோபதேச புத்தகம் மற்றும் கிறிஸ்தவ இறையில், உருவ வழிபாட்டை எதிர்த்தல் ஆகியவற்றை வெளிப்படையாக கற்றுக் கொடுக்காவிட்டால், ஆசிரியர்கள் தங்கள் சொந்த வழியில் நடந்து கொள்ளவும் கல்வியாளர்கள் மாணவர்களின் வாசிப்பு எழுத்து போன்ற நடைமுறை அறிவே மட்டுமே சோதிப்பதாக இருந்தால், நாம் பள்ளிகளை நடத்த வேண்டிய அவசியமே இல்லை.

நமது பள்ளிகளின் முதன்மை நோக்கம் கிறிஸ்தவ சத்தியங்களை கற்றுக் கொடுப்பதாக உள்ளதால் ஒவ்வொரு பள்ளியும் அதன் ஆசிரியர்களும் அதன் மாணவர்களும் அதே நோக்கியே நடத்தப்பட வேண்டும்.

ஆனால் கிறிஸ்தவர் அல்லாத பெற்றோர் தங்கள் பிள்ளைகளை கிறிஸ்தவ ஆசிரியர்களிடம் அனுப்ப சிரமம் ஏற்படுகிறது. ஏனென்றால் அவர்கள் தங்கள் பிள்ளைகள் கிறிஸ்தவர்கள் ஆக்கப்பட்டு விடுவார்கள் என்று அச்சப்படுகிறார்கள். இந்த பயத்தை நம்மால் போக்க முடியாது. கிறிஸ்தவம் பற்றிய அறிவை அவர்கள் புரிந்து கொள்ளும் போது இது தானே மறைந்து விடும்.

கிறிஸ்தவர் அல்லாத ஒருவரிடம் கொடுக்கப்படுகிற எந்த ஒரு புத்தகத்தையும் அவர் மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்கிறார். இப்படி அவர்கள் வழியே கிறிஸ்தவம் கற்றுக் கொடுக்கப்படும் போது ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின்

மனங்கள் விரிவடைகிறது. அவர்கள் அந்த புத்தகங்களை வீடுகளுக்கு கொண்டு சென்று பெற்றோர்களுக்கோ அக்கம் பக்கத்தில் இருப்பவர்களுக்கோ காட்டுகிறார்கள்.

மாணவனின் நடத்தை மேம்படுகிறது. இதனால் ஜனங்கள் மகிழ்கிறார்கள். இதை பார்க்கிற மற்ற பிற சமய ஊர்களும் இது போன்ற பள்ளிகள் தங்களுக்கும் வேண்டும் என கேட்கிறார்கள். சில நேரங்களில் தங்கள் பெருமையை ஒதுக்கி வைத்து விட்டு ஒரு சிலர் கிறிஸ்தவ கல்வி வேண்டும் என்று தானாகவே முன்வந்து கேட்கின்றனர். காலப்போக்கில் அவர்கள் கிறிஸ்தவத்தை தழுவுகின்றனர்.

கிறிஸ்தவர் அல்லாத ஆசிரியர் அலட்சியமாக கிறிஸ்தவ புத்தகங்களை மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்கும் போது தனது பிற சமய நம்பிக்கைகளை மறைவாக பிள்ளைகள் மனதில் பதிக்க வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லலாம். ஒரு பள்ளி துவங்கப்படுகிற காலத்தில் இது ஒருவேளை உண்மையாக இருக்கலாம். பிறகு ஞானம் விரிவடையும் போது சத்தியத்தினால் மனங்கள் தொடப்படும் போது மேற்கண்ட குற்றம் போகும்.

அந்த ஆசிரியர்களே கிறிஸ்தவத்திற்காக அதிகம் வாதாடுபவர்களாக மாறுவார்கள். இது போன்ற அனுபவம் நமக்கு நிறைய உண்டு. ஆசிரியர்கள் சிலை வழிபாட்டை விட்டு விலகி, அது சார்ந்த பல சம்பிராதயங்களையும் விட்டொழித்திருக்கிறார்கள் இந்த விஷயத்தில் சிறு பிள்ளைகளும் நமக்கு முன் மாதிரியாகிறார்கள். அவர்களால் முழுவதுமாக பிற சமயத்தில் இருந்து விடுபட முடியாமல் போனாலும், அது தொடர்பான சடங்குகள் வீட்டில் நடத்தப்படும் போது அதில் கலந்து கொள்ளாமல் தவிர்க்கிறார்கள். சிலை வழிபாடு பாவம் என்பதில் உறுதியாக இருக்கிறார்கள்.

கல்வி அறிவு பெற்ற ஒரு புற சமய ஆசிரியருக்கும் பெயரளவில் கிறிஸ்தவராய் இருக்கிற ஒருவருக்கும் இடையே பெரிய அளவில் வித்தியாசங்கள் கிடையாது என்பதையும் நாம் கணக்கில் எடுக்க வேண்டும். ஒரு பெயர் கிறிஸ்தவரை ஆசிரியர் ஆக்குவதை விட பிற சமயத்து கல்வியாளர் ஒருவரை ஆசிரியர் ஆக்குவது தவறல்ல. ஏனென்றால் பெயர் கிறிஸ்தவர், சிலை வழிபாடு என்ற ஒன்றை செய்வதில்லை என்ற வித்தியாசம் மட்டுமே இருவரையும் வேறுபடுத்தும்.

பிற சமயத்தவரை மக்கள் பிற சமயத்தவராகவே பார்ப்பார்கள் ஆனால் கிறிஸ்தவர்களின் சிறு குறைகள் கூட மற்றவர்களால் சரியாக கவனிக்கப்பட்டு விடும். பெரும்பாலான மக்கள் புற சமயத்தவராகவே இருப்பதாலும் அவர்கள் கிறிஸ்தவத்தை எதிர்க்கும் வறட்டு கொள்கைகளை கொண்டிருப்பதாலும் புற சமயத்து ஆசிரியர்களின் கல்வி அறிவு, ஆளுமை போன்ற திறன்களை பயன்படுத்திக் கொள்ளலாம்.

கிறிஸ்தவரல்லாத ஆசிரியர்களை நியமிக்கும் பழக்கம் உறுதியாகவும் படிப்படியாகவும் நிறுத்தப்பட வேண்டும் என்ற பேராயர் குறிப்பிட்டு இருக்கும் இந்த வரிகளை நான் ஆமோதிக்கிறேன். சீராக நடந்து வரும் எந்த ஒரு ஊழியத்திலும் இது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு ரேனியஸ் ஐயர் தம்முடைய நாட்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.



தேவராஜ் அதிசயராஜ்

கிறிஸ்தவ
# வரலாற்றுச் சுவடுகள்

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் நடத்தும் கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் மாத ஆய்விதழை நண்பர்கள், உறவினர்களுக்கு அறிமுகப்படுத்த அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன். கடந்த நான்கு வருடங்களாக ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து வெளி வந்து கொண்டு இருக்கின்றது. மறைக்கப்பட்ட, மறைந்த, மறந்த வரலாற்றுப் பக்கங்களை அடுத்த தலைமுறையினரின் கரங்களில் கொடுப்பது நம் கடமை.

சங்கத்தின் **'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்'** மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள விரும்பினால் அதற்கான ஆண்டு சந்தா 600 ரூபாய் ஐந்து ஆண்டுக்கான சந்தா 3000 ரூபாய் மட்டுமே. மற்றும் G-Pay மூலம் நன்கொடை செலுத்த விரும்பினால் 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும். காசோலை மற்றும் வரைவோலை செலுத்த **'கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'** (Christian Historical Society) என்ற பெயரில் எடுத்து அனுப்பவும்.

நன்கொடை சந்தா செலுத்திய தகவலை கொடுக்கப்பட்டுள்ள தொலைபேசி எண் அல்லது வாட்ஸ் ஆப் அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு மறக்காமல் தெரியப்படுத்தவும்.

**வங்கி விபரம்**

**Name: Christian Historical Society**

**A/c Number : 1748 020000 4906**

**Bank name : Federal Bank**

**IFSC code: FDRL0001748**

**ஆசிரியர்**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**

**கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,**

**பங்களாச் சுரண்டை-627859,**

**தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)**

**04633 290401, 91767 80001**

christianhistoricalsociety.in

tchsportal.co.in

christianhistorical@gmail.com

## சங்க பணிகளுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்

### கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் அன்பின் வாழ்த்துக்கள்.

பூர்வ நாட்களை நினை; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைச் கவனித்துப்பார்; உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான், உன் மூப்பர்களைக் கேள், அவர்கள் உனக்குச் சொல்லுவார்கள். உபாகமம் 32.7

ஒருங்கிணைந்த திருநெல்வேலி திருச்சபை உருவாகி சுமார் இரண்டரை நூற்றாண்டுகளாகின்றன. பராபரனின் பெரிதான கிருபையினால் இன்று திருமண்டலங்களாகவும், பல நூறு திருச்சபைகளாகவும் பெருகி வந்து கொண்டு இருக்கின்றது. பராபரனுக்கு ஸ்தோத்திரம். திருச்சபை சரித்திரத்தை அறிய வேண்டிய அவாவும் மக்கள் மனதில் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது. இந்நிலையில் **'யார் நமது காரியமாய் போவான்,' இதோ அடியேன் இருக்கின்றேன், என்னை அனுப்பும்'** என்று ஏசாயா தீர்க்கன் முன் வந்தது போல திருநெல்வேலி வரலாற்றை மீள் பதிப்பு செய்யவும், வரலாற்று பணிகளை கள ஆய்வுப் மேற்கொள்ளவும், நின்றுபோன வரலாற்று **'தொடரோட்டத்தை தொடரவும்'** கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட இயக்கமே **' கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்கள் பலரின் அரும்பெரும் முயற்சியினால் தொடங்கப்பட்டது. நம்முடைய வரலாற்றுச் சங்கத்தின் தரிசனத்தில், இறையியல் கல்லூரி மாணவர்கள் பலர் தன்னார்வத்தோடு தங்களையும் இணைத்து செயல்பட்டு வருகிறார்கள். மேலும் தமிழ்நாடு முழுவதும் உள்ள பல வரலாற்று ஆய்வாளர்களுடன் கைகோர்த்து இப்பணியைச் செய்து வருகின்றோம்.

வரலாற்றுச் சங்கமானது கடந்த ஐந்து ஆண்டுகளாக உங்களுடைய ஜெபத்தினாலும் பேராதரவினாலும், மிகச்சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. நமது பத்து அம்ச திட்டங்களில் மாத ஆய்விதழ், பழைய புத்தகங்கள் சேகரித்தல் மற்றும் டிஜிட்டல் செய்யும் பணி, புத்தக மறுப்பதிப்பு பணிகள், நூலகப் பணிகள், மிஷன் சுற்றுப்பயணம், புத்தக வனம் இணைய செயலி, ஆவணப்படம் தயாரித்தல், மிஷன் அருங்காட்சியகம், ஆய்வுக் கருத்தரங்கம் போன்ற பணிகளை கடந்த ஆண்டுகளில் செய்து வருகின்றதை நீங்கள் அறிந்ததே.

இந்த ஆண்டிலும் வரும் ஆண்டுகளிலும் நமது இலக்குகளை அதிகப்படுத்தி இருக்கின்றோம். குறிப்பாக **புத்தக மறுப்பதிப்பு, நூலக கட்டிட பணிகள், மிஷன் அருங்காட்சியகம்** மேற்கண்ட பணிகளை செய்ய வேண்டிய தேவையில் இருக்கின்றோம். இப்பணிகளில் நீங்கள் குடும்பமாகவோ, இயக்கமாகவோ அல்லது தனி நபராகவோ இணைந்து செயல்படவும் பங்கு பெறவும் அன்புடன் அழைக்கின்றோம்.

**நம் சங்கத்தின் பத்து அம்ச செயல்திட்டத்தை நினைவுபடுத்துகின்றோம்:-**

தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் நீண்ட இடைவெளிக்கு பின்பு மீண்டும் ஒரு வரலாறு படைத்துக் கொண்டு இருக்கும் மாத ஆய்விதழ் தான் **'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்'**. கடந்த 2020ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு தலைப்பைக் கொண்டு பல்வேறு அரிய ஆய்வுக் கட்டுரைகளோடு மிக சிறப்பாக வெளி வந்து கொண்டிருக்கிறது. **மறைக்கப்பட்ட, மறந்த, மறைந்த** மிஷனெரிகள் மற்றும் திருச்சபை வரலாறுகள், கள ஆய்வுகள், பல்வேறு அரிய வரலாற்று பொக்கிஷங்களுடன் தமிழகம் முழுவதும் தொடர்ந்து 1530 க்கு மேற்பட்ட வாசகர்களுடன் வந்து கொண்டு இருக்கின்றது.

- காலவோட்டத்தில் அறுபட்டுக்கிடந்த இசைத் தமிழ் கண்ணிகளைத் தற்கால இசைத் தமிழ் உலகுக்குக் கோர்த்துக் கொடுத்த மாபெரும் இசைத் தமிழ் அறிஞர் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் அவருடைய அளப்பரிய செயல்களை நினைவுகூறும் வகையில் **ஆபிரகாம் பண்டிதர் நினைவு மின்னனு ஆராய்ச்சி நூலகம்** நம்முடைய சங்கத்தின் சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகமானது தமிழ் கிறிஸ்தவ மின்னனு நூலகத்தில் **முதல் நூலகம்** என்ற சிறப்பைப் பெற்றது. இந்த நூலகமானது தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், தமிழ் கிறிஸ்தவ ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் ஒரு புதிய மைல் கல்லாகவும் அமையும். மேலும் அநேக புதிய தமிழ் கிறிஸ்தவ எழுத்தாளர்களை உருவாக்கவும், ஆராய்ச்சியாளர்களை உருவாக்கவும் இது உதவியாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, மறுபதிப்பு செய்து வெளியிடப்படாத கிறிஸ்தவ மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறு புத்தகங்களை மறுபதிப்பு செய்து வருகின்றோம். குறிப்பாக நெல்லை திருமண்டல வரலாற்று அறிஞர் பேராசிரியர் அருள்திரு **தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர்** அவர்களுடைய படைப்புகளை மறுபதிப்பு செய்து இன்றைய தலைமுறைகளுக்கு கொண்டு செல்லவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றோம். குறிப்பாக கடந்த ஆண்டு பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் அவர்களின் வரலாற்று சிறப்புமிக்க புத்தகம் அனைத்தையும் மறுபதிப்பு செய்து வருகின்றோம்.

- நம்முடைய வரலாற்று சங்கமும் கிறிஸ்தவ ஆய்வு மற்றும் ஆவணப்படுத்து மையமும் இணைந்து **'புத்தக வனம்'** செயலி செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றது. இந்த செயலி தமிழகத்தில் முதல் முறையாக டிஜிட்டல் முறையில் கையடக்க வடிவில் புத்தகமாக முழு நூலகமாக உங்கள் கைகளில் கொடுத்துள்ளோம். இன்னும் பல ஆயிரம் புத்தகங்களை பதிவேற்றும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும் பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் பெயரிலேயே **நினைவு புத்தக அங்காடி** ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- தமிழக வரலாற்றில் கிறிஸ்தவ மிஷனெரிகளுடைய பங்கு குறிப்பிடத்தக்கது. அந்த மிஷனெரிகள் பணி செய்த இடங்கள், அவர்களுடைய நினைவிடங்கள், தங்கியிருந்த இல்லங்கள், கல்லறைகள், வரலாற்று சிறப்புமிக்க ஆலயங்கள், இரத்த சாட்சிகளாக மரித்த மிஷனெரிகள் பணி செய்த மற்றும் தங்களை இரத்த சாட்சியாக ஒப்புக்கொடுத்த இடங்களை தெளிவான முறையில் பார்வையிடவும், வெளியிடங்களிலிருந்து வரும் மக்களின் வசதிக்காகவும் **Mission Tourist Map** என்று செயலி உருவாக்கி அதன் மூலம் அவர்கள் தங்குமிடங்கள், வழித்தடங்கள் அடங்கிய மின்னியல் கையேடு அமைப்பது.
- வரலாற்றின் பக்கங்களில் மறைந்து கிடக்கும் கீர்த்தனை கவிஞர்கள், உபதேசிமார்கள், முன்னாள் குருமார்களுடைய வரலாற்று பொக்கிஷங்களை சேகரித்து வருகிறோம். மேலும் அவர்களுடைய வரலாற்றுத் தகவல்கள், அவர்களால் உருவாக்கப்பட்ட திருச்சபைகள், கிறிஸ்தவ பாடல்கள் உருவாக்கம் பெற்ற வரலாறுகள், பாடல்களின் வரலாறுகளையும் சேகரித்து அதை மின்னியல் முறைக்கு மாற்றும் பணிகளையும் செய்து கொண்டு இருக்கின்றோம்.
- தமிழ் கிறிஸ்தவ பழைய புத்தகங்களை சேகரித்து மின்னியல் முறையில் ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகத்திலும், பேராசிரியர் **அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் நினைவு புத்தக அங்காடி**யிலும் பதிவேற்றம் செய்வதுடன் புத்தகங்களை தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் விதமாக ஒரு சிறந்த ஆய்வு நூலகம் அமைக்கவும் முயற்சிகளும் மேற்கொண்டு வருகிறோம்.
- மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாற்று சம்பவங்களை அடிப்படையாக கொண்டு ஆவணப்படங்களை வெளியிடுவதற்கான முயற்சிகள் செய்து கொண்டு இருக்கிறோம். கர்த்தருக்கு சித்தமானால், வருகிற ஆண்டு **கிளாரிந்தா, ஏமி கார்மைக்கேல்** மிஷனெரிகளின் வரலாற்றை ஆவணப்படமாக்க திட்டமிட்டிருக்கிறோம்.
- தங்களுடைய வசதியான வாழ்வை தியாகம் செய்து நம் நாட்டிற்கு வந்து கோதுமை மணிகளாய் விதைக்கப்பட்ட மிஷனெரிகள் மற்றும் தன் சொந்த மக்களுக்காக தங்களையே அர்ப்பணித்த நம் இந்திய மிஷனெரிகளின் நினைவிடங்கள் மற்றும் கல்லறைகளை கண்டறிவதுடன் திருச்சபையுடன் இணைந்து பராமரித்து அவர்களுடைய தியாகங்களை குறித்த விழிப்புணர்வை திருச்சபை மக்களுக்கு ஏற்படுத்த பணியாற்றி வருகிறோம்.
- வரலாற்றுச் சங்கம் சார்பில் மிஷனெரிகள் பயன்படுத்திய கலை பொருட்கள் மற்றும் புத்தகங்கள், பைபிள், சேகரித்து வரலாற்று **அருங்காட்சியகம்** அமைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம். மிஷனெரிகள் பயன்படுத்திய பொருட்களை சேகரித்து வருகிறோம்.
- கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் மற்றும் மேய்ப்பரின் பயிலகம் சார்பாக கடந்த இரண்டு மாதமாக இணையதள **சீர்திருத்த தமிழ் திருச்சபையின் ஆரம்பங்கள்** என்ற தலைப்பில் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது செவ்வாய்கிழமைகளில் இரவு ஏழு முப்பது மணிக்கு நடைபெற்று வருகின்றன.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, கடந்த 2017ம் ஆண்டு அற்பமாக ஆரம்பிக்கப்பட்ட நம்முடைய திருநெல்வேலி **கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** இது வரையிலும் பல்வேறு தடைகளையும், நெருக்கடிகளையும் கடந்து வந்திருக்கிறது. வரலாற்று ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், வாசகர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள் ஆகியோருடைய இடைவிடா ஜெபத்தாலும், ஆதரவாலும், உதவியாலும் நம் திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. மேலும் நம்முடைய மாதாந்திர ஆய்விதழும் தடைகளின்றி வெளி வருகிறது. நம்முடைய கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க செயல்பாடுகள் சிறப்பாக அமைய ஜெபத்தாலும், உடலுழைப்பாலும், பொருளாதார வழியிலும் உதவி வரும் அத்துணை நல்லுள்ளங்களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். தொடர்ந்து நாம் செயல்பட வேண்டிய தளங்கள் அநேகமுண்டு. இணைந்து செயல்பட அன்புடன் அழைக்கிறோம். வரலாற்றுச் சங்கத்தின் ஓர் அங்கமாக வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் கருவியாவோம். சர்வ வல்லமை கொண்ட ஆண்டவரின் ஆயுதமாவோம்.

christianhistoricalsociety.in/
tchsportal.co.in





# Yearly Subscription

## 600

christianhistoricalsociety.in

Apply Now

## Monthly Magazine for church history


Return Requested:

To

Tamil Printed Book- For Private Cirulation Only


**CHRISTAVA VARALATRU SUVADUGAL**
# 2.2.3(4)North Street,
Bungalow Surandai-627859.
Tenkasi District
Tamil Nadu
Ph: 04633 290401
Mo: **91767 80001**



Owned & Published By CHRISTIAN HISTORICAL SOCIETY, Tamil Eduction- For Private Cirulation Only
Editor|G.MUTHAIAH SELVAKUMAR| at 2.2.3(4)North Street, Bungalow Surandai-627859. Tenkasi District Ph: 04633 290401